Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1283)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 15 திங்கட்கிழமை (27.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 149


நானும் அரசியல்வாதி
12


மீண்டும் பாவனைக்கு...
14


முக்கியத்துவம் உணர்ந்த செயற்பாடு
11


மாயன் நாகரிகம் அழிந்தது...
13

# இந்தியா, சீனா உட்பட 25 நாடுகள் ஜெனிவாவில் இலங்கையின் பக்கம்

(கொழும்பு)

ஜெனிவா மாநாட்டில் இலங்கையின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாகச் செயற்பட இந்தியா, சீனா, ரஷ்யா, கியூபா உட்பட 25 நாடுகள் முன்வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது ஜெனிவாவிலுள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தொலைபேசி ஊடாக இத்தகவலை தெரிவித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இந்தியா, இலங்கைக்கு ஆதரவு அளிக்காது என ஊடகங்கள் பல வெளியிட்டுள்ள செய்தி முற்றிலும் தவறானது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கைக்கு பாரிய ஒத்துழைப்பை வழங்கி வருவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள மனித உரிமைக் கவுன்ஸிலின் 19 ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட உள்ளதாகக் கூறப்படும் தீர்மானத்தை 25 முதல் 30 நாடுகள் ஆதரிக்கும் சாத்தியங்கள் இருக்கின்றன என்று ஜெனிவாத் தகவல்கள் கூறுகின்றன.

47 நாடுக்ளைக் கொண்ட மனித உரிமைகள் சபையில் 24 நாடுகளின் ஆதரவு இருந்தால் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்குத் தமது உறுதியான ஆதரவைத் தெரிவித்துள்ளன.

அதேபோன்று ஆபிரிக்க நாடுகளும் தமது ஆதரவைத் தெரிவிக்க உள்ளன. இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா, கனடா அல்லது மேற்கு நாடு ஒன்று (15 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடித் துறைமுகம்; தொழிலாளர் கோரிக்கை


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசத்தில் துறைமுக வசதிகள் இல்லாது கடற்றொழிலை மேற்கொள்வதில் சில கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாக கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் சி.அருள் ஜெனிபேர்ட் கூறுகையில்,

முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகளில் துறைமுக வசதிகள் இல்லாத நிலை காணப்படுகிறது. இதனால் எதிர்காலத்தில் பாரிய கடற்றொழிலை மேற்கொள்வதற்குக் குறிப்பாகப் பாரிய கடற்றொழில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் முடிவு சமயோசிதமானது



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கலந்து கொள்வதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுத்த தீர்மானம் சமயோசிதமானது எனபொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பங்கேற்கப்போவதில்லை என இறுதி நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இந்தத் தீர்மானம் சமயோசிதமானது எனவும் இந்த அமர்வுகளில் அவர்கள் பங்கேற்றிருந்தால் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட (15 ஆம் பக்கம்

## சந்தர்ப்பத்தை தவறவிட்டது கூட்டமைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு எதிராக கடந்த 60 வருடங்களாக இடம்பெற்ற அநீதிகளுக்கு சர்வதேசத்தின் முன்பாக நீதி கேட்கவும், தமிழர்களின் உரிமைக்கான நிலைப்பாட்டை தெளிவாக சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்லவும் காலம் கொடுத்திருக்கின்ற இந்த அருமையான சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கும் முடிவு பெரும் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் கொடுத்திருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் (15 ஆம் பக்கம் பார்க்க)



## புனர்வாழ்வளிக்கப்பட்ட 17 பேருக்கு பல்கலை அனுமதி

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது படைகளிடம் சரணடைந்து புனர்வாழ்வு முகாம்களில் இருந்து கல்வி கற்ற 17 மாணவர்கள் இந்த ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். 2012 ஆம் கல்வியாண்டிற்கென தேசிய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 23500 மாணவர்களுள் புனர்வாழ்வு முகாம்களில் தங்கி கல்விகற்று க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற 17 மாணவர்கள் அடங்குவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் கலாநிதி பிரியந்த பிரேமகுமார தெரிவித்தார்.

இவர்களுள் ஒரு மாணவன் மருத்துவத்துறைக்கும் ஏனையோர் ஏனைய துறைகளுக்கும் அனுமதி பெற்றுள்ளனர்.

க.பொ.த. உயர்தர வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்த போது இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு கட்டாயத்தின் பேரில் சேர்க்கப்பட்டவர்கள் என கலாநிதி பிரியந்த பிரேமகுமார தெரிவித்துள்ளார்.

## பன்னாட்டு இராஜதந்திரிகளுடன் ஜெனிவாவில் அமைச்சர் டக்ளஸ்



(ஜெனிவா)

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்ள ஜெனிவா சென்றிருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, பன்னாட்டு அரச பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார்.

தமிழ் பேசும் மக்களுக்கு தேவையானது அமைதி, சமாதானம், அபிவிருத்தி மற்றும் அரசியலுரிமை ஆகியவற்றை விரைவாக அடைவதற்கும் நிறைவேற்றுவதற்கும் நாம் அரசாங்கத்துடன் மட்டுமே உறவுகளை வலுப்படுத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருப்பதோடு அரசாங்கத்துடன் பகைமையுணர்வுகளை வளர்ப்பதன் ஊடாக எதையும் நாம் சாதிக்க முடியாது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## ஆபிரிக்க நாடுகளுக்கு சூறாவளி சுற்றுப் பயணம்



(ஜெனிவா)

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவு வழங்கும்படி கோரும் முகமாக அமைச்சர் ஜிஎல்.பீரிஸ் ஆபிரிக்க நாடுகளுக்கு சூறாவளி சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஜெனிவா நகரிற்கு சென்றிருந்த வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று ஆபிரிக்க நாடுகளுக்கான விசேட விஜயம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

இன்று ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் அமர்வை பிரதிநிதித்துவப்படுத்தும் 4 ஆபிரிக்க நாடுகளுடன் கலந்துரையாடுவதற்காகவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

மனித உரிமைகள் அமர்வில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா தீர்மானம் நிறைவேறினாலும் சட்ட அழுத்தம் எதுவும் இருக்காது

### ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டால் பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டதாக அர்த்தம் கொள்ள முடியாது. அதேபோல இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் கூட அது எந்தவிதமான சட்ட அழுத்தத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய இலங்கைக்குள் முன்வைக்கப்படும் தீர்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார். அது தொடர்பில் அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்த்துள்ளதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்

## வடமாகாண ஆளுநர் உறுதி அளித்தார்



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து பதிலீட்டு ஆசிரியர்கள் அனுப்பப்படுவதால் தொண்டர் ஆசிரியர்கள் தமது நியமனத்தை இழக்க வேண்டியேற்படும் என்றும், வன்னிப் பகுதியில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்க வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட வடமாகாண ஆளுநர் வன்னிப் பகுதியில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்றும் அது உடனடியாக நடைபெறும் என்றும உறுதியளித்தார்.

நேற்று யாழ்ப்பாண பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஆளுநரின் சந்திப்பில் இதுபற்றி எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் இதில் வன்னிப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிகையும், வன்னிப் பிரதேசத்தில் இருந்து யாழ். குடாநாட்டிற்கு வருகைதரும் ஆசிரியர்களின் விபரமும் வெளியிடப்பட்டன. ஒவ்வொரு வலயங்களில் இருந்தும் உட்செல்லும், வெளியேறும் ஆசிரியர்களின் விபரங்களை அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள ஆளுநரிடம் தெரிவித்தனர்.

இதைவிடஆசிரியர்களுக்கான உள்ளக இடமாற்றம் வன்னி இடமாற்றத்தின் பின்னர் நடைபெற வேண்டுமென்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஆளுநர அது தொடர்பில் முறையான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொண்டார். இதைவிட அதிபர்களின் இடமாற்றமானது மே மாதம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அதற்காக ஆசிரிய தொழிற்சங்கம் உள்ளிட்ட உயர்மட்ட குழு நியமிக்கப்பட்டு ஒரு முறையான நடைமுறைக்கூடாக அது நடைபெற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களில் இடமாற்றத்திற்குத் தகுதியானவர்களை ஆசிரிய தொழிற்சங்கங்களின் பிரசன்னத்துடன் சரிசெய்து மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பிக்கும்படி ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், பிரதம செயல்ாளர், கல்வி, கல்வி சாரா விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், உதவிச் செயலாளர்கள், மாகாணக் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர், மாகாண கல்வி அதிகாரிகள், வடமாகாணத்தின் சகல வலயக் கலவிப் பணிப்பாளர்கள், ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(137)

# இடம்பெயர்ந்தோருக்கு உலர் உணவு

## யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் கடந்த ஒரு வருட காலமாக வழங்கப்படாததினால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் அவலங்களுக்குள் தாம் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த 22 வருடங்களுக்கு மேலாக சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், வாடகை வீடுகளிலும் வசிக்கும் தமக்குத் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அன்றாட உணவிற்கே பெரும் அவலப்படுவதாகவும் மேலும் தெரிவித்தனர்.

உணவுப் பொருட்களின் விலையேற்றத்தினால் தமது குடும்பங்களுக்குக் கிடைக்கும் நாளாந்த வருமானத்தில் பால்மா, பாண், மண்ணெண்ணெய் போன்ற பொருட்களின் விலையேற்றத்தினால் ஒருவேளை உணவு உட்கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி உள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு அரச அதிபர் இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணம் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

# நெடுங்கேணியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீட்டுத்திட்டம்

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்தில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு இடம்பெயர்வுக்கு முன்னர் வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்ட நிலையில் அவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டு வீடுகளைக் கட்டிமுடிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதைவிட பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களின் நிதியுதவியின் கீழும் இம்மக்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டு பெருமளவு வீடுகள் கட்டப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் வீட்டுத்திட்ட வசதிகள் கிடைக்காத இப்பிரதேச மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட இருப்பதாக நெடுங்கேணிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (கே)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(கோப்பாய்)

யாழ். பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் மோகனராஜன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஜங்கரன், யாழ். வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் வ.செந்தூரன், ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலி அமைப்பாளர் எஸ்.எம். தர்மராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (135)

** ** **

யாழ். கோப்பாய் தெற்கு தமிழ் கலைவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் சு.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் பூ.குகநாதன், பிரதம விருந்தினராகவும், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும், கோப்பாய் பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஜங்கரன் சிறப்பு விருந்தினராகவும், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி ஸ்ரீ.இராமநாதன், ஜே/258 கிராம அலுவலர் செ.செல்வச் சந்திரன், ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி அ.பரமேஸ்வரி ஆகியோர் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர். (135)

# "யாழ்ப்பாணத்தின் பெருமை" கண்காட்சிக்கு அலைமோதிய பார்வையாளர்கள்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தின் பெருமை" எனும் தொனிப்பொருளிலான புகைப்படக் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைத்தார்.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இறுதிநாள் கண்காட்சியில் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்கள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன், யாழ். மத்தியகல்லூரி மாணவர்களின் 'பாண்ட்' இசை வாத்தியத்துடன் நூலக கேட்போர் கூடத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றல் நிகழ்வுடன் கண்காட்சிக் கூடத்தினை வடமாகாண ஆளுநர் நாடாவெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து கண்காட்சி கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த "யாழ்ப்பாணதின் பண்டைய அரும்பெரும் பொக்கிஷங்களைப் பார்வையிட்டதுடன் அவற்றின் முக்கியத்துவங்களையும் கேட்டறிந்து கொணடார்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் ரமேஸ் விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் 512 ஆவது படைப்பிரிவின் படையணித் தளபதி, யாழ். வணிகர் கழகத் தலைவர் எஸ்.செயசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அரச அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கண்காட்சியினைப் பார்வையிட்டனர். நிகழ்வின் இறுதியில் வடமாகாண ஆளுநருக்கும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் புகைப்படக் கண்காட்சி ஏற்பாட்டாளர்களினால் புகைப்படங்கள் அடங்கிய "அல்பம்" நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. (எஸ்)

# முல்லைத்தீவில் சீரற்ற வைத்திய சேவை நோயாளர்கள் தொடர்ந்து பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாஞ்சோலை வைத்தியசாலையில் காலையில் காலம் தாமதித்தே வைத்திய சேவைகள் இடம்பெறுவதால் அவசர நோயாளர்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இவ்வைத்தியசாலைக்கு காலை 9.30 மணிக்கே மருத்துவர்கள் வருகைதந்து நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் வரும் நோயாளர்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியாது வேறு மருத்துவமனையை நாடிச் செல்வதாகத் தெரிவிக்கின்றனர்.

குழந்தைகள், முதியோர் மற்றும் விபத்துக்களால் காயமடைந்தோருக்கான சிகிச்சைகளைப் பெறுவதில் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் விபத்தில் காயப்பட்டு இரத்தம் சிந்திய நிலையில் இரத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தாம் துணியால் கட்டியோ அல்லது தாங்களாகவோ மருந்துபோட்டு இரத்தத்தைக் கட்டுப்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

காலைவேளை அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் நன்மை கருதி வைத்தியர் நியமிக்கப்பட்டால. தாம் இலகுவாக சிகிசசையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இவ்விடயம் குறித்து வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நோயாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (141)

# ஆடை தயாரித்தல் தொழில் கண்காட்சியும் விற்பனையும்

(கோப்பாய்)

தேசிய அருங்கலைகள் பேரவையும் கோப்பாய் தையல் பயிற்சி நிறுவனமும் இணைந்து நடத்தும் உடை அமைத்தல் தொழில் திறன் கண்காட்சியும் விற்பனையும் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அருகில் கோப்பாய் வீதி கோப்பாய் மத்தியில் இடம்பெறவுள்ளது.

தேசிய அருங்கலைகள் பேரவையின் இணைப்பாளர் கோ.நவதர்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், கோப்பாய் பிரதேச எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான இ.ஜங்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (135)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1285)


# உதவி வழங்கல்

கோப்பாய் பிரதேச செயலகத்தின் மண்ணெண்ணெய் முத்திரை விநியோகமும், தெளிகருவிகள், உடுபுடைவைகள் விநியோகமும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், கோப்பாய் பிரதேச எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான இ.ஜங்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (135)

# பால்நிலை சமத்துவ விழிப்புணர்வு செயற்பாடு

(முல்லைத்தீவு)

யு.என்.எயிட் நிறுவனமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட சம்மேளனமும் இணைந்து முல்லைத்தீவு மாவடடத்தில் பால்நிலை சமத்துவம் தொடர்பாக இளைஞர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடொன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் செயற்பாடு முள்ளியவளை மத்தி பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக கிழமை முதல் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய கலைப்பாடங்கள் ஊடாக துறைசார்ந்த விரிவுரையாளர்களால் இவ் விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (141)

**ஒரு சிறிய செயலின் மூலம் ஒரு எளிய மனதை மகிழ்ச்சிப் படுத்துவது ஆயிரம் பேர் கூடும் ஒரு பிரார்த்தனையிலும் விட மேலானது.**

**- காந்தி**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## சமூகத்தைக் காக்கும் புத்திசாலித்தனம்?

"வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளும் சரி முக்கிய நபர்களும் சரி இரண்டுமுறை அரங்கேறுகின்றனர் என்றார் ஹெகல். இத்துடன் அவர் ஒன்றைச் சேர்த்துச் சொல்ல மறந்துவிட்டார். முதல் முறை அவலமாகவும் இரண்டாம் முறை கேலிக்கூத்தாகவும் இவ்வரங்கேற்றங்கள் நிகழ்கின்றன என்பதுதான் அது" என்றார் கார்ல் மார்க்ஸ்.

சில நிகழ்வுகளை நாம் பலமுறையும் ஒரேமாதிரியாகவே அரங்கேற்றிக் கொண்டிருப்பதை என்னவென்று சொல்ல முடியும்?

ஐ.நா. நியமித்த நிபுணர்குழு அறிக்கையும் சரி, இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையும் சரி, இறுதி யுத்தத்தின் போது அரச படைத் தரப்பு, விடுதலைப் புலிகள் தரப்பு இரண்டு பக்கத்திலும் போர்க்குற்றங்கள் நடைபெற்றிருப்பதையே சுட்டிக்காட்டியிருக்கின்றன.

குறிப்பாக, புலிகள் வலிந்து மக்களைப் போரில் ஈடுபடுத்தியதையும் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தி அழிவுக்குட்படுத்தியதையும் ஏற்றுக்கொண்டு தங்கள் அறிக்கைகளில் பதிவு செய்திருக்கும் சர்வதேச சமூகம், யுத்தத்தில் புலிகளின் தலைமை முழுவதுமாக அழிந்துவிட்டதைக் கருத்தில் கொண்டே, அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மௌனப்படுத்தியிருப்பது தெரிந்ததே.

மறுதரப்பான இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் குறித்து மட்டுமே சர்வதேச சமூகம் பேசிவருவதால், எந்த ஒரு நாடும் புலிகளைக் குற்றமற்றவர்களாகக் கருதுவதாக எண்ண இடமில்லை. பெரும்பாலான நாடுகளில் பயங்கரவாத இயக்கமாக இப்போதும் தடைசெய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பைக் குறித்து சர்வதேசத்தின் நிலைப்பாடு என்னவென்பதை இறுதி யுத்தம் நடைபெற்ற காலத்தின் போதே நாம் தெளிவாக அறிந்து விட்டோம்.

இப்போதும் இலங்கை அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில், புலித்தலைவரின் படங்களுடனேயே புகைவண்டிகளில் போய் இறங்குவதை சர்வதேச சமூகம் எப்படிப் பார்க்கும்? எந்தவொரு வெளிநாட்டினதும் அரசாங்கம் சாராத தனிமனிதர்கள் யாரோ சில பேர், இந்த வன்மத்தை மட்டுமே கொண்டிருக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவாகப் பேசியும் எழுதியும் விடுவதை, நாமே நமக்கான பூதாகரப் பிரச்சாரமாக்கிக் கொண்டு சும்மா கொந்தளித்து அடங்குவது எப்படி சர்வதேசத்தை வெல்வதாகும்?

அதே கொடிகளையும் அதே பழைய முறைகளையும் மாற்றாமல் அதேவித ஆர்ப்பாட்டங்களைச் செய்துகொண்டிருப்பது, அதே பழைய விளைவுகளையே திரும்பத் திரும்ப ஏற்படுத்திக் கொண்டிருக்கத்தானா? பாடழிவையும் பேரவலத்தையும் சந்தித்துத் துவண்டிருக்கும் சமூகம் மெல்ல மெல்ல அதிலிருந்து மீள வேண்டும். தன் தவறுகளை சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டும். அங்கிருந்து புதுப்பாதை காண வேண்டும்.

அதைவிட்டு, எந்தப் பிழைகளுமே நடவாதது போல, அதே வரலாற்றுக் காட்சிகளையே திரும்பவும் நடிப்பது எவ்வளவு பெரிய கேலிக்கூத்து! நாடு கடந்த அரசாங்கம், தொடரும் விடுதலைப் பயணம், தனித்தேசத் தாகம் என்று மக்களைத் தூண்டிவிட்டு மீண்டும் சமூகத்தைச் சிதைத்துத் துலைக்க 'வீரம் பேசும்' குரல்கள், இன்றைய நிலையில் மகா கேலிக்கூத்தல்லாமல் வேறென்ன?

'சிங்களவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க' இங்குள்ள மக்களை உசுப்பிப் பலிக்கிடாய்கள் ஆக்குவது இனியும் சரிதானா என்று யோசிக்க வேண்டாமா!

நம் மனோபாவத்தின் அடிப்படைகளை, இதுவரை பயன்படுத்தித் தோல்விகண்டுவிட்ட அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ளாமல் நாம் மீட்சி பெறும் வழிக்குச் செல்ல முடியாது. வீம்பும், விவேகமற்ற பகையுணர்வும், முட்டாள்த்தனமான ரோசங்களும், நமக்கு நாமே "ஷோ" காட்டிக்கொள்ளும் ஆர்ப்பாட்டங்களும் நம் சமூகத்தை மேலும் மேலும் சிதைத்துக் கொண்டிருக்குமே தவிர, சீரமைக்க உதவாது.

புலம்பெயர் தேசங்களிலும் அயலகத்திலும் இனரீதியான ஆவேச நெருப்பை எரித்து எரித்துக் குளிர்காயும் ஒருசிலரை நம்பி மற்றவர்களும் அந்த மயக்கங்களுக்குள் சென்றுவிடுவது, நம்மைப் புத்திசாலிச் சமூகமாகவும் காட்டாது; சமூகத்தைக் காக்கும் புத்திசாலித்தனமும் ஆகாது.

- ஆசிரியர்

# வவுனியாவிலுள்ள சிறைக்கைதிகள் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றம்

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேகநபர்கள் சிலரை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இடப்பற்றாக்குறை மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக சுமார் 50 கைதிகள் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளதாக சிறைச்சாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவிததுள்ளார்.

இதேவேளை, வவுனியா சிறைச்சாலையிலுள்ள சிலர் சிறைச்சாலை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தி இருந்தமை தெரிந்ததே.

கைதி ஒருவரிடம் கையடக்க தொலைபேசியொன்று உள்ளதாகக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைக்கு சென்ற அதிகாரிகள் மீது கைதிகள் தண்ணீர்ப் பிரயோகம் நடத்தியதாக சிறைச்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்போது சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் கைதிகளுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதைத் தொடர்ந்து கல் வீச்சும் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரிதான உயிரினங்களை கடத்த முயன்றவர்கள் கைது

(புத்தளம்)

காடுகளில் வாழும் அரிதான உயிரினங்களை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு கொண்டு செல்ல முற்பட்ட 6 வெளிநாட்டுப் பிரஜைகள புத்தளம், கற்பிட்டி ஆலங்குடாப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள், புத்தளம் மாவட்ட வன இலாகா அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஜேர்மன், அவுஸ்ரேலியா, பெல்ஜியம், வெனிசுவேலா ஆகிய நாடுகளின் பிரஜைகளே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து அரிதான உயிரினங்கள் பல மீட்கப்பட்டதுடன், அவற்றைப் பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், மீண்டும் எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# 22 தமிழக மீனவர்கள் கைது

(கொழும்பு)

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 22 பேரை கைது செய்துள்ளதாக இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் கமான்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 5 படகுகளுடன் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள இதேவேளை, இராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் தாமஸ், முருகேசன், ரமேஷ் உள்ளிட்ட 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# செயலிழந்தது மணிக்கூடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மணிக்கூட்டு கோபுரம் செயலிழந்து கணப்படுவதால் பணயிகள் பெரும் சிரமம்படுவதாக தெரிவிக்கின்றனர்.

நகரப்பகுதிக்கு பயணம் மேற்கொள்ளும் பயணிகள் மணிக்கூட்டுக் கோபுரத்தில் இயங்கும் கடிகாரத்தினைப் பயன்படுத்தி தமது நேரத்தைக் கணப்பிடுவதனால் தற்போது கடிகாரம் செயலிழந்து காணப்படுவதால் தமக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

எமது முன்னோர் சிலர் கடிகாரம் கட்டும் வழக்கத்தைக் கடைப்பிடிக்காதவர்கள், மணிக்கூட்டு கோபுரக் கடிகாரத்தின் மூலம் நேரத்தை தாம் கணிப்பதாகவும் தெரிவித்தனர்.

பண்டைய எமது சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வரும் வேளையில் யாழ். மணிக்கூட்டுக் கோபுரம் எதற்காக கவனிப்பார் அற்ற நிலையில் இருக்கின்றது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர். (எஸ்)

# அரசுமீதான அழுத்தத்தைக் குறைக்க நீர்கொழும்பு மீனவர்கள் தீர்மானம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள நெடுநாள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீன்பிடிப் படகு மீனவர்கள் கடலுக்குச் செல்ல தீர்மானித்துள்ளனர்.

கம்பஹா மாவட்ட நெடுநாள் மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் சங்கமும் நீர்கொழும்பு நெடுநாள் மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் சங்கமும் இணைந்து இத்தீர்மானத்தை எடுத்துள்ளன.

சர்வதேசத்தில் இருந்து இலங்கைக்கு விடுக்கப்படும் அழுத்தங்களுக்கு மத்தியில் அரசுக்கு மேலும் அழுத்தங்களைக் கொடுக்காதிருக்க தாம் இந்த முடிவை எடுத்ததாக குறித்த சங்கங்கள் அறிவித்துள்ளன.

ஆனால் இத்தீர்மானம் ஒரு மாதத்திற்கு மாத்திரமே செல்லுபடியாகும் என கம்பஹா மாவட்ட நெடுநாள் மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் டி.ஜூட் பெரேரா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்திற்கு ஏற்ப அரசு தமக்கு நிவாரணம் வழங்காவிடின் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலாபம் மற்றும் நீர்கொழும்பு மீனவர்கள் கடந்த சில நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகருக்கு கொலை மிரட்டல் விடுத்து கப்பம் பெற்ற மூவர் கைது

(கொழும்பு)

மாத்தறை வெலிகம பகுதியைச் சேர்ந்த வர்த்தகருக்கு கொலை மிரட்டல் விடுத்து கப்பம் பெற்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொலைபேசி மூலம் குறித்த வர்த்தகருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதென மாத்தறை பிரதேசத்திற்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கப்பம் பெறுவதற்காக பொரளைக்கு வந்திருந்த போது சந்தேகநபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து கப்பம் பெறும் குழுக்களை வழிநடத்திய சந்தேகநபரின் தந்தையென்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது கப்பமாக பெறப்பட்ட பணத்தை தமது வங்கிக்கணக்குகளில் வைக்கப்பட்டிருந்த மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மாத்தறை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதை தொடர்ந்து அடுத்த மாதம் ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# கல்விக்குத் தயார்படுத்தும் முதல் நிறுவனம் முன்பள்ளிகளே

## ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

சிறந்த முன்பள்ளிகளை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அதன் மூலம் சிறந்த கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்க முடியும். சிறார்களை கல்விக்கு தயார்படுத்தும் முதல் நிறுவனமாக முன்பள்ளிகள் காணப்படுகின்றன என ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள புன்னைநீராவி கிராமத்தில் 16 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கலைமகள் முன்பள்ளி கட்டடத்தினைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்தின் பின்பு இந்தப் பிரதேசங்களில் பல முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மக்களின் தேவைகளும் படிப்படியாக தீர்க்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் முன்பள்ளியின் ஏனைய தேவைகளும் கருத்தில் எடுக்கப்படும். விளையாட்டு மற்றும் கற்றல் உபகரணங்களை பெறுவதற்காக எனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாவினையும் இந்த முன்பள்ளிக்காக ஒதுக்கீடு செய்து தருவேன் என உறுதியளிப்பதோடு, முன்பளளிகளின் வளர்ச்சியில் பெற்றோர்கள் பங்காளிகளாக மாறவேண்டும். மேலும் இந்த முன்பள்ளியினை சிறந்த முன்பள்ளியாக மாற்றுவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் சத்தியசீலன், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கிராம அலுவலர் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் முன்பள்ளி ஆசிரியர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சாரணிய நூற்றாண்டு விழா வவுனியாவில் நடைபெற்றது



(யாழ்ப்பாணம்)

சாரணியத்தின் ஸ்தாபகர் பேடன்பவல் பிரபுவின் 155 ஆம் ஆண்டு பிறந்ததின நிகழ்வும் இலங்கை சாரணியத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வும் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்திலுள்ள ஜனாதிபதி சாரணியர்களும் திரிசாரணியர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த துவிச்சக்கரவண்டி பவனி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து காலை 8 மணிக்கு ஆரம்பித்து நகர் வழியாக ஏ 9 வீதியின ஊடாக சென்று மீண்டும் மத்திய மகா வித்தியாலயத்தை வந்தடைந்திருந்தது.

இதனையடுத்து சாரணர்களின் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றிருந்ததுடன் சாரணிய மாணவனால் எழுதப்படட கவித்தொகுப்பின் வெளியீடும் குறும்படமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த அனைத்து பாடசாலை சாரணியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (125)

# தேசத்தின் மகுடம் கண்காட்சியில் கிளிநொச்சி மாணவிகளின் நடனம்

(கிளிநொச்சி)

தேசத்தின் மகுடம் கண்காட்சி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மூன்று பாடசாலைகள் கலந்துகொண்டு வெவ்வேறு நடன நிகழ்ச்சிகளை மேடையேற்றியிருந்தன.

பளை மத்திய கல்லூரி மாணவர்கள் வசந்தனின் ஆட்டத்தினையும், கரைச்சி- அம்பாள்குள விவேகானந்தா வித்தியாலய மாணவர்கள் ஒயிலாட்ட நிகழ்ச்சியையும், பூநகரி -ஜெயபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் செம்பு நடன ஆற்றுகையையும், மேடையேற்றியிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வுகளில் சுமார் 60 மாணவர்கள் உட்பட ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (142)



கோப்பாய்ப் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ச.கேதீஸ்வரனுக்கும் கோப்பாய்ப் பிரதேச ஈபிடிபி அமைப்பாளரும் வலி.கிழக்கு பிர தேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான ச.ஐங்கரனுக்குமிடையில் கடந்த புதன்கிழமை சந்திப்பொன்று நடைபெற்றது. இதனை அடுத்து சுகாதார சேவைகள் பணிப் பாளரால் அனுப்பப்பட்ட குழுவினரும் கோப்பாய்ப் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும் வலி கிழக்கு பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான ச.ஐங்கரனும் கோப்பாய்ப் பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் செய்து குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வதனைக் காணலாம். (135)

# பருத்தித்துறை பொலிஸாரின் இலவச நடமாடும் சேவை

(வடமராட்சி)

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தினரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையொன்று நேறறு முன்தினம் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இச்சேவையில் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலை மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினரால் இரத்ததான நிகழ்வும் இடம்பெற்றது.

இதில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தரும், பருத்தித்துறை 521 ஆவது டிவிசன் பிரிகேடியர் இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். அத்துடன் இலவச மருத்துவ சேவைகளும் ஆலோசனைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டன.

இதைவிட பிறப்பு இறப்பு பதிவுகள், தொலைந்துபோன அடையாள அட்டை மற்றும் காணிப் பிரச்சினைக்கான விசாரணைகள் என்பனவும் இடம்பெற்றது. இந்நிகழ்வை பருத்தித்துறை உதவிப்பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி ஜி.ஏ.எஸ். அபயகோன், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் ச.திரவியராசா ஆகியோர் ஆரம்பித்து வைத்ததுடன், கிராம சேவையாளர்கள், மந்திகை வைத்தியசாலையின் இரத்த வங்கி அதிகாரி டாக்டர் சிறநிலாந், வெளிநோயாளர் பிரிவு வைத்தியர் டாக்டர் ச.சூரிகா மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (116)

# சுகாதாரச் சீர்கேடான சிற்றுண்டி உற்பத்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிற்றுண்டி வகைகள் சுகாதார சீர்கேடான முறையில் தயாரிக்கப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் உள்ளூர் சிற்றுண்டி வகைகளை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களின் எள்ளுருண்டை, கச்சான் அல்வா போன்றவற்றில் மண், கல் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளதுடன் இவை சுகாதார சீர்கேடான முறையில் உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதேவேளை தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற தயாரிப்புக்கள் சிறந்த முறையில் காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (69)

# மோட்டார் திணைக்களத்தினால் வாகன இலக்கத்தகடு விநியோகம்

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்ட மோட்டார் வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள் மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமைச் செயலகத்தினால் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படடுள்ளன.

கீழ் குறிப்பிடும் இவ் இலக்கத்திற்கான வாகன உரிமையாளர் கள் இக்காரியாலயத்துக்கு அலுவலக நாட்களில் பிப 2.00 மணிக்கும் பி.ப 4.00மணிக்கும் இடையில் வாகனப் பதிவுப் புத்தகத்துடன் நேரடியாக வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

புதிதாக இலக்கத்தகடுகளைப் பெறுவோர் வாகனப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டையையும் கொண்டு வருமாறும், பழைய இலக்கத் தகடுகளை வைத்திருப்போர் மற்றும் தொலைத்தவர்கள் பழைய இலக்கத் தகடுடனும் அல்லது பொலிஸ் பதிவுடனும் வருகை தருமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்கள மோட்டார் வாகனப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

வாகன இலக்கத்தகடுகளின் விபரம் கீழ்வருமாறு,

GT-0366, GY-3926, JC-6227, KD-2392, MK,7763, PA-3526, QD-4136, QE-0770, QF-7957, QG-6056, QH-0450, QH-2601, QI-3206, QP-2087, TJ-7791, TZ-6632, YV-5182, YV-5657, YV-6392, YV-6414, YV-6416, YV-6484, YV-6609, YV-6635, YV-6650, YV-6804, YV-6873, YV-6882, YV-6888, YV-6891, YV-7356, YV-7358, YV-7360, YV-7387, YV-7388, YV-7391, YV-7978, GN-5509, GS-8614, HM-8338, JN-4638, PA-0363, PA-1532, TA-5647, TS-8186, TZ-3594, VA-2556, VS-7438, VU-6649, VY-0765, YV-4220, YV-4996, YV-5676, YV-5752, YV-5775, YV-5780, JP-0408, KC-7278, LE-6473, LE-6474, MT-7455, PR-6376, TR-2030, UH-0062, YV-0651, YV-0713, YV-1686, YV-1725, YV-1735, YV-1737, YV-1739, YV-1746, YV-2516, YV-2535, YV-2565, YV-2567, YV-2568, YV-2570, YV-2571, GV-1592, HQ-4359, HS-9475, QF-6358, YV-1387, YV-1392, YV-1419, YV-1421, YV-1422, YV-1427, YV-1861, YV-2294, YV-2334, YV-2708, YV-2786, YV-2927, YV-3110, YV-3112,GX-4787, HH-7201, JU-1868, PA-2786, YV-5807, YV-5808, YV-6583, YV-6637, YV-7957,GO-3392, JD-6628, JG-2588, JZ-7868, LH-9494, QA-6681, US-0515, YV-2937, YV-3125, YV-3301,YV-4251, YV-4255, YV-4256, YV-4269, HL-1195, JJ-7817, LH-0545, QF-5403, XG-8499, YU-9271, YU-9280, YV-0170, YV-0506, YV-0723, YV-0725, YV-0727, YV-1258, YV-1272, YV-1276, JB-7200, LB-9758, LC-7395, MU-9320, QI-0658, UE-3639, UM-0095, VF-3695, VT-5855, VY-7298, WB-0623, YU-8530, YU-8544, YU-8546, YU-8552, YU-8596, YU-8597, YU-8598, YU-8661, YU-8684, YU-8974, YU-9195, YU-9311, YU-9313, YU-9329, YU-9332, YU-9986, YU-9987, YU-0691, GE-5435, GR-7193, HJ-2662, KS-0659, QH- 9998, VJ-8255, XG-2379, YU-2900, YU-6724, YU-6794, YU-6812, YU-6905, YU-6928, YU-7059, YU-7264, YU-7355, YU-7380, YU-7410, YU-7446, YU-7451, YU-7485, YU-8353, YU-8355, YU-8364, YU-8371, YU-8375,YV-1388, HV-1428.



அரியாலை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவின்போது நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன், கிராம அலுவலர் ஸ்.விஜிதன், நல்லூர் பிரதேச செயலக கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பா. மாலினி, நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவரும் ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான அ. இரவீந்திரதாசன், பிரதேசசபை உறுப்பினர் வா.ஶ்ரீகணேசன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# அரசின் எரிபொருள் மானியம் வறிய மக்களுக்கு பயனளிக்கிறது

## ஈ.பி.டி.பி. வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்

(வடமராட்சி)

மகிந்த சிந்தனையின் கீழ் நாட்டில் உள்ள வறுமையான மக்களுக்கு பல நிவாரணத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இவற்றில் மண்ணெண்ணெய் மானிய முத்திரையும் ஒன்றாகும். இவ்வாறு ஈ.பி.டி.பி.வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினரான திருமதி இந்திரன் கைலாயினி தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் மண்ணெண்ணெய் மானிய முத்திரை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

20ஆம் திகதி பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் சமுர்த்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் பருத்தித்துறை சிவன் கோவில் பரிவர்த்தன கலாமண்டபத்தில் மண்ணெண்ணெய் மானிய முத்திரைக்கு தெரிவுசெய்யப்பட்ட மின்சார இணைப்பு வசதி அற்ற 105 குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் மானிய முத்திரைகள் முதற்கட்டமாக வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மானிய முத்திரை வழங்கி வைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நாட்டில் மின்சார இணைப்பு வசதி பெறமுடியாமல் வாழும் வறுமையான மக்களுக்கு அதுவும் முக்கியமாக விவசாயத்தை நம்பி வாழும் மக்களுக்கு உதவும் பொருட்டு விலைவாசி உயர்வுக்கு ஈடுகொடுக்கும் முகமாக மண்ணெண்ணெய் மானிய முத்திரை வழங்கப்பட்டு வருகின்றது. அதுவும் எமது பிரதேசத்திலும் மின்சார வசதிகளற்ற குடும்பங்களுக்கு இவ்வாறான மானியம் வழங்குவது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இது போன்ற வறுமையான குடும்பங்களுக்கு இவ்வாறான நிவாரண வசதிகளை வழங்கி அவர்களை வறுமையில் இருந்து மீள்வதற்கு இந்த அரசாங்கம் ஈடுகொடுக்கும் என எதிர்பார்க்கிறேன். முதற்கட்டமாக 103 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். அடுத்தடுத்த கட்டத்திலும் மற்றைய குடும்பங்களும் பயன் அடையவுள்ளனர். இந்த மண்ணெண்ணெய் மானியத் திட்டத்திற்கு சமுர்த்திப்பிரிவு தொடர்ந்து செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(116)

# குற்றச் செயல்களைத் தடுக்க சிவில் பாதுகாப்பு குழுக்கள்

(தீவகம்)

ஊர்காவற்துறை பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுக்கும் வகையில் இப்பிரதேசத்தின் பொலிஸ் பிரிவு மட்டத்தில் சிவில் பாதுகாப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவு மட்டத்திலான சிவில் பாதுகாப்புப் பிரிவுகளின் அங்குரார்ப்பணக்கூட்டம் அண்மையில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்கான பொறுப்பதிகாரியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தெரிவு செய்யப்பட்ட சிவில் பாதுகாப்புப் பிரிவுக்குரிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர் பாகவும், குற்றச்செயல்களை கட்டப்படுத்துவதற்குமான ஆலோசனைகளும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இக்குழுக்களுக்கான தலைவர், செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் ஊடாகவும் கிராமங்கள் தோறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாதந்தோறும் இக்குழுக்களுக்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளதுடன் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஊர்காவற்துறை பொலிஸ் பகுதிகளான காரைநகர், ஊர்காவற்துறை ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (85)

# அறுவடைக்குத் தயாராகியுள்ள வயல்களை நாசமாக்கும் கால்நடைகள்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் இம்முறை நெற்செய்கையின் போது அதிகவிளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

புலோலி கமநல சேவை நிலையப்பகுதியில் ஒரு ஏக்கருக்கு 20 -22 மூடைநெல் விளைச்சல் பெறப்பட்டிருக்கிறது.

நெல்விளைச்சல் பகுதியான வல்லிபுரம், வலிக்கண்டிப்பகுதி மற்றும் துன்னாலைப் பிரதேசங்களில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது. எனினும் அப்பகுதி கால்நடைகள் ஒரு சில வயல்களில் சென்று விவசாயிகளுக்கு நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இனிவரும் காலங்களில் விவசாயத்திற்கு தடையாகவுள்ள கால் நடைகளை கட்டி வளர்க்குமாறும் அண்மையில் காட்டாக்காலி கால்நடைகளால் விவசாயிகளுக்கு சேதம் ஏற்படுத்திய மாடுகள் வல்லிபுரம் பகுதியில் பிடிக்கப்பட்டு உரிமையாளர்கள் உரிமைகோரப் படாத பட்சத்தில் ஏலத்தில் விடப்பட்டது.

இதனை ஓர் படிப்பினையாகக்கொண்டு கால் நடைவளர்ப்போர்கள் விவசாயத்திற்கு தடையாக இருக்கவேண்டாம் என புலோலி கமநல சேவை நிலைய அதிகாரி கே. கோகுலன் தெரிவித்துள்ளார். (116)

# சோதனை நடவடிக்கை

(தீவகம்)

வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட வங்களாவடிச் சந்திக்கு அண்மையில் உள்ள கடைகளில் வேலணை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் நுளம்பு பெருகும் வகையில் பொலித்தீன், ரயர்களில் நீர் தேங்கிக் காணப்பட்டதை அடுத்து அவ்வாறு வைத்திருந்த 3 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் இவ்வாறு செயற்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்டது.(85)

# மல்லாவி மருத்துவமனையில் ஆய்வு கூடவசதி இல்லை

(மல்லாவி)

மல்லாவி மருத்துவ மனையில் ஆய்வு கூட வசதிகள் எக்ஸ்ரே வசதிகள் இல்லாத தால் நோயாளிகள் பிற இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அலைந்து திரிகின்றனர்.

டெங்கு, மலேரியா போன்ற அபாயகரமான நோய்கள் பரவி வருகின்ற நிலையில் இங்கு ஆய்வுகூட வசதிகள் இல்லாமை பெரிய குறைபாடாக உள்ளது.

இதனால் நோயாளர்கள் கிளிநொச்சி வவுனியா ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டிய பரிதாப நிலையிலுள்ளனர். மேலும் எக்ஸ்ரே வசதிகளும் இங்கு இல்லாததால் பெரும் பாதிப்புக்களை மக்கள் எதிர் நோக்கி வருகின்றனர்.

# முரசின் இன்றைய பலன்


(27.02.2012 -திங்கட்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 15 ஆம் திகதி. பஞ்சமி, சித்தயோகம் முற்பகல் 11.56 வரை.
நட்சத்திரம் அச்சுவினி முற்பகல் 10.32 வரை. கரிநாள்
இராகுகாலம் 7.59 - 9.29 வரை. சுபநேரம் 12.29 - 1.59 வரை.
எமகண்டம் 10.59 - 12.29 வரை. குளிகைகாலம் 1.59 - 3.29 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வாழ்க்கையில் சலிப்பு, இலட்சுமிகரம், வாகன சேர்க்கை, மறைமுக எதிர்ப்புகள். |
| ரிஷபம் | சந்தோஷம், அதிகாரிகள் அனுசரணை, உறவினர்கள் பாராட்டு, உடல் பாதிப்பு. |
| மிதுனம் | புகழ் கிடைக்கும், சேமிப்பு உயரும், தொழில் மந்தம், உறவினரால் செலவு. |
| கடகம் | போட்டிகளால் கவலை, நிதானம் வேண்டும், ஒப்பந்த அனுகூலம்,அதிகாரிகள் சீற்றம். |
| சிம்மம் | பிற்பகல் நன்று, தடைகள் அகலும், வாழ்வில்தன்னிறைவு, உற்சாகம். |
| கன்னி | புதுமுயற்சி தவிர்க்கவும், மேலதிகாரிகள் தொல்லை, உறவினர் ஆதரவு, சஞ்சலம். |
| துலாம் | நன்மை உண்டாகும், வாழ்க்கையில் உயர்வு, மருத்துவச் செலவு, சொத்தால் பிரச்சினை. |
| விருச்சிகம் | திடீர் நன்மை, வழக்கில் வெற்றி, உடல் ஆரோக்கியம், அதிர்ஷ்டநாள். |
| தனுசு | திடீர் தனவரவு, காரியானுகூலம், உறவினர் உதவி, மந்தமான வருவாய். |
| மகரம் | வாகனசுகம், ஆடைஆபரண சேர்க்கை, எதிர்ப்புக் குறையும், உற்சாக மிகுதி. |
| கும்பம் | பரிவு காட்டல், கடன்தொல்லை தீரும், வருமானத்தில் திருப்தி, முன்னேற்றம். |
| மீனம் | திருப்திகரம், இடமாற்றம்வரும், நிதானத்துடன் செயற்படவும், தொழில் இலாபம். |

# பரமர் சங்கமம்



அப்பொழுதெல்லாம் இயக்கத்துக்கு இளம் பெடி,பெட்டையளைப் புடிப்பதுக்கு பிற்காலத்தில் வன்னியில் நிகழ்ந்ததுபோல் கட்டாயப் பிடிப்பு அல்ல இது.

கவர்ச்சி கரமாக பிடிப்பதற்குச் சில தந்திரங்கள் கையாளப்பட்டன. ஏற்கனவே சேர்ந்த இளைஞர், யுவதிகளை பத்து, இருபது நாட்கள் விடுமுறை வழங்கி அவரவர் கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு அனுப்பி விடுவார்கள்.

சும்மா வல்ல சீருடையுடன் உந்துருளி, துப்பாக்கி, கைக்குண்டுகள் கொடுத்துத்தான் விடுவார்கள். அவர்கள் கிராம வீதிகளில் கவர்ச்சியாக வீதியுலாப் போவார்கள்.

இவர்களை வாய் பாத்துக்கொண்டு ஒரு கூட்டம் பின்னாலும் முன்னாலும் திரியும். அவர்களை வாசிகசாலை முன்றல், ஆலய வளவுகளில் கூட்டி வைத்து போராளி வகுப்புகள் நடத்துவார்.

அவரது விடுமுறை முடிந்து பாசறைக்குத் திரும்பிய அந்நிய நாட்களில் அந்தக்கிராமத்தில் இருந்து பத்து, இருபது இளைஞர், யுவதிகள் அவ்வூரில் காணக்கிடைக்க மாட்டார்கள்.

இப்புடித்தான் அந்தக் காலங்களில் இயக்கத்துக்கு ஆள் புடித்த படலம் நிகழ்ந்தது. புதிதாகச் சேர்ப்பதற்கு, போராளி, தான் கொணர்ந்த துப்பாக்கியை கழட்டிப் பூட்டிக் காட்டுவார். அவர்களின் கைகளிலும் குடுத்து ஆசையைத் தணிப்பதுடன் தூண்டிலும் போடுவார்.

. மோட்டார் சைக்கிளை ஓடக்கற்றுக்கொடுப்பார். அதுவரையில் மோட்டார் சைக்கிள் மற்றும் துப்பாக்கியைத் தொட்டுக் கூடப்பார்த்திருக்காதவர்களக்கு எப்படி இருக்கும்?

புதிதாகச் சொர்க்கத்தைக் கண்டமாதிரித்தான். இதன்பின்பாக அவரும் பத்து, இருபது நாட்கள் விடுமுறையில் விஜயம் செய்து பத்து இருபது பேர்களை இழுத்துப் போவார்.

இப்புடி எண்டு மட்டுமில்லாமல் அக்காலப்பத்திரிகைகள் செய்திகளை வேறு பிரசுரிக்கும்; தனது புத்திரனை போராட்டத்தில் இணைத்து விட்ட வீரம் மிக்க தாய்; தந்தை; பெற்றோர் என்றவாறு.

இத்தகைய தந்திரோபாயங்களைப் பிரயோகித்துத்தான் அந்நாளில் இயக்கத்துக்கு ஆக்களைப் புடிச்சவை.

அதோடை பொருளாதாரத்தடைகள் காரணமாகத் தொழில்களை இழந்து, உணவுப் பொருட்களை வாங்க முடியாமல் வாடிய வறுமைக் கோட்டுக்குடும்பங்களுக்கு இது வசதியாகவும் அமைஞ்சது.

அதுகளெண்டாலும் அங்கபோய் மூண்டு வேளையும் எதையோ திண்டு புழைக்கட்டுமெண்டு நினைச்சும் பல பெற்றோர் பிள்ளைகளை இயக்கத்தில் இணைத்து விட்ட சம்பவங்களும் நடந்ததெண்டாப் பொய்யே பின்னை...


# ஏகாதிபத்தியத்தின் அக்கறை மனித உரிமைகள் பற்றியதல்ல!

- வி.சின்னத்தம்பி கட்டுரையிலிருந்து.

பொதுவாக, அமெரிக்க ஏகாதிபத்தியம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக அரங்கில் நடத்தி வந்த – நடாத்தி வரும். மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளை உலகின் மூலைமுடுக்கில் உள்ள அத்தனை மக்களும் நன்கு அறிவர். 1950 – 51 கொரிய யுத்தம், 1965 – 70 இந்தோ சீன யுத்தம், யூகோஸ்சிலோவாக்கியா மீதான தொடர் குண்டு வீச்சு, ஈராக் மீதான ஆக்கிரமிப்பு, ஆப்கானிஸ்தான் மீதான ஆக்கிரமிப்பு, லிபியா மீதான ஆக்கிரமிப்பு, சிரியா - ஈரான் மீது ஆக்கிரமிப்பதற்கான முஸ்தீபு என அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அடுக்கிக்கொண்டு போகலாம்.

இந்த ஆக்கிரமிப்பு யுத்தங்களின் போது, அமெரிக்காவினதும் அதன் மேற்கத்தைய கூட்டாளிகளினதும் ஆக்கிரமிப்புப் படைகள் பல இலட்சம் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தன. வியட்நாம் யுத்தத்தின் போது, ஏறத்தாழ 20 இலட்சம் வரையிலான வியட்நாம் மக்களை அமெரிக்கா தலைமையிலான படைகள் ஈவிரக்கமின்றி கொன்று குவித்தன.

ஈராக் மீது விதித்த பொருளாதாரத் தடையாலும், பின்னர் அந்நாடு மீது தொடுத்த நேரடி யுத்தத்தினாலும் குழந்தைகள், வயோதிபர்கள், பெண்கள் உட்பட சுமார் 8 இலட்சம் ஈராக்கிய மக்களை அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் கொன்று குவித்தன. ஆப்கானிஸ்தானில் 2001 ஆண்டிலிருந்து இதுவரையில் ஏறத்தாழ 25,000 மேற்பட்ட



பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாமெனக் கூறப்படுகின்றது.

இவை தவிர தென் அமெரிக்காவின் சர்வாதிகார ஆட்சிகளின் ஊடாகவும், ஆபிரிக்காவின் எதேச்சாதிகார ஆட்சிகளின் ஊடாகவும், மத்திய கிழக்கில் சியோனிச இஸ்ரேல் மூலமாகவும், ஈரானின் மன்னர் ஷா, பிலிப்பைன்சின சர்வாதிகாரி மார்க்கோஸ் போன்றவர்கள் மூலமாகவும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் மேற்கத்தையக் கூட்டாளிகளும் நடத்திய மனிதப் படுகொலைகளும், சதி – சூழ்ச்சி நடவடிக்கைகளும் எண்ணுக்கணக்கில் அடங்காதவை.

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை மட்டுமின்றி, அதன் உள்நாட்டுக் கொள்கைகளும் மக்கள் விரோதமானது என்றபடியால்தான், அங்கு கடந்த வருடம் ‘வோல் ஸ்றீற்றை கைப்பற்றும் போராட்டம்’ ஆரம்பமாகி அது அமெரிக்கா முழுவதும் மட்டுமின்றி, மேற்கு ஐரோப்பா முழுவதும் பரவியது. இன்றும் அமெரிக்கச் சனத்தொகையில சுமார் 40 வீதமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அவலம் அந்த நாட்டில் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

அவ்வாறெல்லாம் இருப்பினும் அமெரிக்கா தன் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கைவிட்டதாகவோ, தனது போக்கை மாற்றிக் கொண்ட



தாகவோ இல்லையென்பதையே, அது அண்மையில் லிபியா மீது தொடுத்த போரும், தற்பொழுது சிரியா, ஈரான் மீது ஆக்கிரமிக்க எடுத்து வரும் முயற்சிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமது நம்பிக்கைக்குரிய விசுவாசியான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் களத்தில் இறக்கியதுடன், அவருக்கு ஆதரவாக ஐ.தே.க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, மனோ கணேசன் போன்றோரையும் அணிதிரட்டியது.

இந்தக் கேவலமான அரசியல் காய் நகர்த்தலில், தமிழர்களுக்கு எதிராக வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்தவரும், புலிகளை மட்டுமின்றி பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களையும் கொன்று குவிக்கக் காரணமாயிருந்த பொன்சேகாவை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது ஏகாதிபத்திய விசுவாசம் காரணமாக ஆதரிக்க முன்வந்தது. பொன்சேகாவின் பின்னால் அணிதிரண்டு நின்ற அதே சக்திகளே இப்பொழுது ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்துடனும் இணைந்து நிற்கின்றன.

இலங்கைக்கு எதிராக ஏகாதிபத்திய சக்திகளும், புலம்பெயர் புலிகளும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரவுள்ள தீர்மானம், உண்மையில் இலங்கையில் புலிகளை அழிக்கும் இறுதிப்போரில் நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றிய அக்கறையுடன் அல்ல. ஏகாதிபத்தியத்தின் நோக்கங்களை தென்னாசியாவில் நடைமுறைப்படுத்தத் தடையாகவுள்ள தற்போதைய இலங்கை அரசைத் தண்டிப்பதே அந்தத் தீர்மானத்தின் உள்ளார்ந்த நோக்கமாகும். அமெரிக்காவிலிருந்து வெளியாகும் ஒரு பிரபலமான பத்திரிகையில் அண்மையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை ஒன்று, இந்த உண்மையை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

## கருத்து வேறுபாடு



என்னுடன் அறிமுகம் செய்துகொள்பவர்கள் பெரும்பாலும் “நான் உங்கள் கதைகளை விரும்புகிறேன், ஆனால் எனக்குக் கருத்துவேறுபாடுகள் உள்ளன” என்ற வரியுடன்தான் ஆரம்பிப்பது வழக்கம். தொடர்ச்சியாகக் கருத்துச்செயல்பாட்டில் ஈடுபட்டிருப்பவர்கள், நான் பேசும் தளங்களில் தங்கள் தரப்பைத் திட்டவட்டமாகப் பதித்துக் கொண்டிருப்பவர்களே அந்த வரியைச் சொல்லத் தகுதி படைத்தவர்கள்.

மற்றவர்கள் இரு காரணங்களுக்காகச் சொல்கிறார்கள். முதன்மையானது என் மேல் காழ்ப்போ கோபமோ கொண்ட பிற நண்பர்களுடன் உரசல் வராமலிருக்கும் முன்னெச்சரிக்கைதான்.

பொது வாசகர்களைப் பொறுத்தவரை அதற்கு “என்னை ஒரு தனித்துவம் உள்ள ஆளுமையாக அங்கீகரித்துப் பேசுங்கள்” என்பது மட்டுமே பொருள். அது ஒருவகையான தாழ்வுணர்ச்சியின் வெளிப்பாடு, ஆனால் இயல்பானது. தன்னுடைய கருத்துக்கள் பேச்சில் இயல்பாக வெளிப்பட்டுத் தன் தனித்தன்மை தெரியவரட்டுமே ஏன்ற தன்னம்பிக்கை இருந்தால் அதைச் சொல்லத் தேவையில்லை.

உண்மையில் மாற்றுக்கருத்து கொண்டவர்கள் நான் சொன்ன தரப்பைத் திட்டவட்டமாக அதே சொற்களில் மேற்கோள் காட்டக்கூடியவர்களாக இருப்பார்கள். ஏனென்றால் அதைப்பற்றி அவர்கள் பல கோணங்களில் ஏற்கனவே யோசித்திருப்பார்கள். பலரிடம் விவாதித்திருப்பார்கள். பிறருக்குப் புகைமூட்டமான நினைவுகளே இருக்கும்.

ஆரம்ப காலத்தில் “எனக்குக் கருத்து வேறுபாடுகள் உண்டு” என ஒருவர் சொன்னதுமே “என்னென்ன கருத்துக்களிலே வேறுபடுறீங்க? அதுக்கு என்னென்ன ஆதாரங்கள வச்சிருக்கீங்க?” என உடனே கேட்டு மடக்கும் துடிப்பு எனக்கிருந்தது. இப்போது அதை ஒரு பரிவுப் புன்னகையுடன் எதிர்கொள்ளப் பழகிவிட்டேன். நம் சூழலின் பொது மனநிலையின் இயல்பான ஒரு பகுதி அது, அவ்வளவுதான்.

நான் ஒற்றைவரிக் கருத்துக்களைச் சொல்வதில்லை என்பது உண்மையில் மாற்றுக்கருத்துடன் என் தரப்பை வாசிப்பவர்களுக்குத் தெரியும். வரலாற்றுப் பின்புலத்துடன் தர்க்கபூர்வமாக விரிவாக என் தரப்பைச் சொல்ல எப்போதும் முயன்றிருப்பேன். ஆகவே “அது அப்டி இல்லீங்க” என ஒற்றை வரியில் என் தரப்பை ஒருவர் மறுக்க முடியாது. என் கருத்துக்களுக்கு உண்மையான மாற்றுத்தரப்பு உடையவர், அவரிடமும் இதற்குப் பெரும்பாலும் சமமான ஒரு வரலாற்றுப் பின்னணியையும் தர்க்கத் தொடர்ச்சியையும் வைத்திருப்பார்.

அவ்வாறு முழுமையான ஒரு மாறுபட்ட கருத்து இல்லாமல் இருக்கும் வெறும் அபிப்பிராயங்கள் என்னைப் பொறுத்தவரை இல்லாதவை மட்டுமே.

- ஜெயமோகன்

அப்பா அரசியல்வாதி, மகன் அப்பாவிடம் போய், “அப்பா உங்களை மாதிரியே நானும் அரசியலில் சேர வேண்டும், தலைவராக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன், எனக்கு அரசியல் பாடம் சொல்லித் தாருங்கள்” என்றான்.

அவரும் “சரி” என்று சொல்லிவிட்டு, ஒரு பெரிய ஏணியை எடுத்துக் கொண்டு வந்து சுவரில் சாத்தினார்.

“மகனே! இந்த ஏணியில் ஏறிப்போய் அந்தப் பரண் மேலே இருக்கும் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வா” என்றார்.

“ஏணி உயரமாக இருக்கிறதே! பயமாக இருக்கிறது”, என்றான் மகன்.

“பயப்படாதே.... நான் பிடித்துக் கொள்கிறேன்” என்றார் அப்பா.

மகன் ஏணியில் ஏறினான்.. உச்சிக்குப் போனதும் அப்பா பிடியை விட, ஏணி சரிந்து மகன் கீழே விழுந்தான்.

இடுப்பைப் பிடித்துக் கொண்டபடியே எழுந்து “என்னப்பா இப்படி கையை விட்டுட்டீங்களே” என்று கத்தினான்.

அப்பா நிதானமாகச் சொன்னார் “மகனே இதுதான் அரசியலில் முதல் பாடம்” என்றார்.

“இதில் என்ன பாடம் இருக்கிறது?” என்று கேட்டான் மகன்.

அப்பா சொன்னார், “பெற்ற அப்பனாக இருந்தாலும் நம்பாதே, அதுதான் அரசியலின் முதல் பாடம்”.




## கலாநிதி பார்வையில் கனடிய ஊடகங்கள்



புலம்பெயர் சூழலில் குறிப்பாகக் கனடாவில் தமிழில் இயங்கும் பெரும்பாலான ஊடகங்களும்

தமிழ்மொழியையும் தமிழினத்தையும் வைத்துப் பணம் திரட்டும் பெரும்பணியிலேயே பயணிக்கின்றன.

சமூகத்திற்கு நல்லன செய்யாமை, நல்லனவற்றை அறிவிக்கப் பின்னிற்றல், பிழையான செயற்பாடுகளை இடித்துரைக்கும் திராணியற்ற நிலை, சுயவிளம்பரங்கள், ஊடகம் என்பது சமூகத்திற்குப் பொதுவானது என்ற கோட்பாட்டை மறந்து குடும்பம் - நண்பர் என்ற குழாத்துக்கு மட்டுமே சொந்தம் என்ற நிலைப்பாடு, பணம் கொடுத்தால்தான் சமூக நிகழ்வுகள் அறிவிக்கப்படும் என்ற அவலநிலை எனப் பல்வேறு அணிகலன்களுடனேயே ஊடகங்கள் எம்மிடையே செயற்படுகின்றன என்பதை எந்த ஒரு சாதாரண வாசகனும் சமூகச் செயற்பாட்டாளனும் அறிந்து கொள்வான்.

எத்தனையோ நல்ல விடயங்கள் சமூகத்தில் ஒரு சிலரது அர்ப்பணிப்புகளுடன் நடைபெறுகின்றன. அவற்றை எவ்வாறு இருட்டடிப்புச் செய்யலாம் என்பதில் சில ஊடகங்கள் மிக அக்கறையாக உள்ளன. தொலைக்காட்சி – வானொலி – பத்திரிகை என்ற முக்கிய ஊடகங்கள் கனடாவின் அரசியல் யாப்புக்கூறும் புனிதமான பத்திரிகைச் சுதந்திரத்தைப் பயன்படுத்துகின்றனவா என்பது கேள்விக்குறியே. வானவில் கூறுவது போன்று இவர்களுக்கு தமிழ் இனவாத முதலாளித்துவ சக்திகளினதும் ஏகாதிபத்திய சக்திகளினதும் நலன்களே முக்கியமாக இருக்கின்றன.

பொருள் வளமும் மனித வளமுமுள்ள கனடாவில் ஊடகங்கள் சாதனை படைக்கக் கூடிய எத்தனையோ வாய்ப்புக்கள் உள்ளன. அவற்றை அவை பயன்படுத்திக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. குழு அடிப்படையில் குறுகிய வட்டத்துள் சுழன்றால் வெளியிலுள்ளவர்களின் பல்வகைத் திறன்கள் அனுபவங்கள் கனடியப் பெருவெளியில் காற்றோடும் பனியோடும் சங்கமமாகிவிடும்.

ஆனால் ஊடகங்கள் இப்பணியில் தவறிழைத்தால் வரலாறு அவர்களை மறக்காது. பத்திரிகை சமூக சிந்தனையோடும் இனம் - மொழி அக்கறையோடும், தமிழினத்தின் புத்திஜீவிகள் புத்துணர்ச்சி பெறும் வகையில், பக்கச் சார்பற்ற நிலையில், ஆக்கபூர்வமான சிந்தனை – செயற்பாடு என்பவற்றுடன் இயங்கினால் நிச்சயம் வெற்றிக்கொடி நாட்டலாம். முயற்சி திருவனையாக்கும். வாழ்த்துக்கள்.

**-கலாநிதி இ.பாலசுந்தரம் - கனடா**

(கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணி புரிந்தவர். சமூக அக்கறையுள்ளவர். இப்பொழுது கனடாவில் வாழ்ந்து வரும் அவர் அங்கும் ரொறன்ரோ பிராந்திய கல்விச் சபையில் ஓர் ஆலோசகராகப் பணி புரிவதுடன், தமிழ் சமூகத்தின் சிந்தனை மேம்பாட்டுக்காகவும் உழைத்து வருகிறார். அவர் வானவில்லின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு எழுதிய கடிதத்தில் கூறியுள்ள இக்கருத்துக்கள், தமிழில் இயங்குகின்ற அனைத்து ஊடகங்களுக்கும் மிகவும் பயனுள்ளவை என்றபடியினால், அதை இங்கு பிரசுரித்துள்ளோம் - நன்றி - ஆசிரியர் குழு)

**- வானவில் 14 மாசி இதழிலிருந்து.**

# பிறந்தநாள் வாழ்த்து

29 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்


## எஸ்.விஜயகாந்த்

யாழ்.மாநகர சபை உறுப்பினர், (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)

அவர்களை

**பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்**
**வாழ்கவென வாழ்த்துகின்றோம்.**

வெளிக்கும் திசைகள் நோக்கி
விரையுமுங்கள் பயணத்தில்
உதிக்கும் புதிய நம்பிக்கையொடு
உலாவருமிக்காலமது போல்
புதிய அகவை பலதாக
பூத்துமலர வாழ்த்துகிறோம்



**வாழ்த்தும் அன்புத் தம்பிமார்கள்:**
திலீபன், சிறி, முகுந்தன், நிமல், நிக்சன், மயூரன், யாபேல், கரன்,
தீபன், சீசோன், றிசாத், நவராஜ், பிறைனஸ்

(C/1313)

# பிறந்தநாள் வாழ்த்து

29 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்

## எஸ்.விஜயகாந்த்

யாழ்.மாநகர சபை உறுப்பினர், (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)

அவர்களை

**பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்**
**வாழ்கவென வாழ்த்துகின்றோம்.**

இளைஞர் அணியின் தலைவராக
எம்மோடு நீங்கள் என்றென்றுமாக
புதியகொள்கை பரப்புரையாய்
புதுமை புரிய விழைபவரே
அகவை பல ஆயிரங்கால்
தளைத்து நிமிர வாழ்த்துகிறோம்
எம் தலைவர் வழி நின்றே.



**அன்புடன்:**
அரியாலை இளைஞர்கள்

(C/1311)

# பிறந்தநாள் வாழ்த்து

29 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்

## எஸ்.விஜயகாந்த்

யாழ்.மாநகர சபை உறுப்பினர், (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)

அவர்களை

**பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்**
**வாழ்கவென வாழ்த்துகின்றோம்.**

மக்களுக்குச் சேவையாற்ற - இம்
மாநிலத்தில் வந்தவரே
திக்கற்றோர் ஒளி பிறக்க - வாழ்வில்
திருப்பங்கள் செய்பவரே
இன்றும்போல் என்றுமாக
ஏற்றமுடன் வாழ்வீர்காள்!



**அன்புடன் வாழ்த்தும் :**
குளிர்பான தயாரிப்பாளர்கள்

C/1312

# பிறந்தநாள் வாழ்த்து

29 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்

## எஸ்.விஜயகாந்த்

யாழ்.மாநகர சபை உறுப்பினர், (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)

அவர்களை

**பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்**
**வாழ்கவென வாழ்த்துகின்றோம்.**



ஜனநாயக வழிதிறந்த
தலைவரின் பாதை மீது
இளைஞர் அணியின் தளபதிபாதம்
என்றென்றும் நகர்வதாக!
இந்த
இளவயது அகவை போன்று
என்றென்றும் புதிதாய் பிறந்து
அரியசேவை ஆற்றி வாழ
அன்போடு வாழ்த்துகிறோம்!

**அன்புடன் வாழ்த்தும்**
மத்தியூஸ் இளைஞர் படை அணி

(C/1310)

# உல்லாசப் பயணிகளின் வருகை இலங்கையில் சடுதியாக அதிகரிப்பு

இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் வருகையானது கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது சடுதியாக அதிகரித்திருப்பதாக உல்லாசப்பயண அபிவிருத்தி அதிகார் சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில மட்டும் 85 ஆயிரத்து 874 பேர் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளாக இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இத்தொகையானது 15.7 சதவீத அதிகரிப்பாகும் என உல்லாசப்பயண அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை மேற்கு நாடுகளிலிருந்து 36 ஆயிரத்து 497 பேர் உல்லாசப்பயணிகளாக இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கிழக்காசிய நாடுகளிலிருந்தும் இங்கு வருகைதந்துள்ள உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையும் உச்சப்பெறுமதி ஒன்றை காட்டி நிற்பதோடு அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 28.4 சதவீத வளர்ச்சியைக்காட்டி நிற்பதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மீண்டும் பணி நிறுத்த போராட்டத்திற்கு ஏற்பாடு


(கொழும்பு)

முன்னர் இணங்கிக் கொள்ளப்பட்டவாறு தமது வேதன முரணபாடுகள் அதிகாரிகளினால் தீர்த்து வைக்கப்படத் தவறும் பட்சத்தில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் நிர்மல் ரஞ்சித் தேவசிரி எமது செய்திச் சேவைக்கு இதனைத் தெரிவித்தார். அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமக்கான வேதன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இல்லை எனில் பாரிய பணி நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சி.பிளேன் சேவைக்கு தனியாருக்கு அனுமதி



(கொழும்பு)


சி பிளேன் (கடல் விமானம்) பயணம் தொடர்பாக சிவில் விமான சேவைகள் அமைச்சு ஜோன் கீள்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

'சிபிளேன்' தொடர்பாக தனியாருக்கு அனுமதி வழங் கிய முதல் சந்தர்ப்பம் இதுவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சிறிலங்கன் நிறுவனத்திடம் இரண்டு சி பிளேன்கள் உள்ளன. நாடு பூராகவும் 15 இடங்கள் இந்த விமானத்தை தரையிறக்க வசதிகள் உள்ளன.

இந்த விமானம் உல்லாசப் பயணிகள் மத்தியில் மிகவும் பிரபல்யமானதாகும் என்று சிவில விமான சேவைகள் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தியவண்ண தடாகம் மக்களின் பாவனைக்கு திறப்பு



ஜெயவர்தனபுரக் கோட்டையில் இயற்கைக் கண்கவர் காட்சிகளுடன் அமைந்துள்ள திய வண்ண தண்ணீர்த் தடாக வளாகத்தை சபா நாயகர் சாமல் ராஜபக்ஷ பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைத்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் மேற்பார்வையின் கீழ் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பொது அபிவிருத்திச் செயற திட்டம் இதுவாகும்.

இதற்கான கட்டுமானப் பணிகள இராணுவம், கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வளாகம் வாரத்திலுள்ள ஏழு நாட்களும் 24 மணி நேரம் திறந்து வைக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கடத்தப்பட்ட குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(ஏறாவூர்)

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் வெலிக்கந்தை பிரதேசத்தில் கடத்திச் செல்லப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் நேற்று முன்தினம் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஏறாவூர் ஓடாவியார் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான எம். ஐ.எம்.இப்றாஹம் (வயது - 42) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கடந்த 4ஆம் திகதி வெலிக்கந்தை - செவனப்பிட்டி பிரதேசத்திற்கு வியாபாரத்திற்காகச் சென்றிருந்த வேளை காணாமல் போனதாக அவரது குடும்ப உறவினர்கள் வெலிக்கந்தைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

கருவாடு மற்றும் தேங்காய் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கென பதின்மூவாயிரம் (13,000.00) ரூபா பணத்துடன் இவர் சென்றிருந்தார் என குடும்பதினர் தெரிவித்தனர். வெலிக்கந்தை பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்களுக்கு நிவாரணம் வழங்கினால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வேன்

## அரசுக்கு ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்கப்படும் என்றால் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்ள தயார் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி - கட்டுகஸ்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார். மக்கள் தற்போது பெரும பொருளாதாரச் சிக்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமானால்



அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தருவதற்கு தயார் என்று குறிப்பிட்டார்.

# பேதமின்றி ஒன்றிணையுமாறு மதத்தலைவர்கள் வேண்டுகோள்!

(கொழும்பு)

இறைமையுள்ள- ஜனநாயக பண்புகளைக் கொண்ட நமது நாட்டின் மீது மேற்குலகம் திட்டமிட்ட வகையில் அழுத்தங்களைப் பிர யோகித்து எம்மை சர்வதேசத்தின் முன் குற்றவாளியாக நிறுத்த முற்படும் செயற்பாடுகளுக்கு எதிராக இன - மத- பேதமின்றி அனைவரும் இன்று இடம்பெறும் பேரணியில் ஒன்றிணைய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக மதத் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு- கிழக்கு உட்பட அனைத்து மாவட் டங்களிலும் மேற்குலக நாடுகளின் பிரேரணைக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தப்படவுள்ளன. இலங்கைக்கு எதிரான துரோகச் செயல்களுக்கு நாம் துணைபோக மாட்டோமென ஒன்று திரண்டு மக்கள் குரலை எழுப்பவுள்ளனர். இக் கோஷத்திற்கமைவாக யாழ்ப்பாணம்- கிளிநொச்சி- முல்லைத்தீவு- மட்டக்களப்பு- திருகோணமலை உள்ளடங்கலாக தமிழ்- முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதர அரசியல் கட்சிகள்- தொழிற சங்கங்கள்- இயக்கங்கள் என்று பல்வேறு கிராமிய நமது நாட்டிற்காக கட்சி பேதங்களை மறந்து பேரணியில் கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு மாநகரில் இலட்சக் கணக்கான மக்கள் கூடும் பேரணியொன்றை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# அம்பாறையில் மீள்குடியேற்றம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கஞ்சிகுடியாறு, தங்கவேலாயுதபுரம் ஆகிய பிரதேசத்தினைச் சேர்ந்த 830 குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆட்டிறைச்சிக் கடை வியாபாரிக்கு கத்திக்குத்து

(ஏறாவூர்)

ஏறாவூர் - ஜிப்ரி தைக்கா வீதியைச் சேர்ந்த நபர் ஒருவர், கும்பல் ஒன்றினால் கத்திக் குத்து மற்றும் தடியடித் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் செங்கலடி பொதுச் சந்தையில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானவர் ஆட்டிறைச்சிக் கடை வைத்திருக்கும் முஹைதீன் பாபா பாறூக் (வயது - 41) என்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த நபர் கரடியனாறு வைத்தியசாலையல் சிகிச்சை பெற்று வருகின்றார். இது குறித்து கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மனைவியைக் கைவிட்டவர் சுட்டுக்கொலை

நாத்தாண்டிய - அம்பகஹாவாடிய பகுதியில் 25 வயதுடைய ஒருவர் நேற்றிரவு சுடடுக் கொல்லப்பட்டுள்ளார். ஆறு வயதான பிள்ளை ஒன்றுக்குத் தந்தையான இவர் தனது மனைவியைக் கைவிடட்டவர் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இவரது கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. நாத்தாண்டிய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மக்களைக் கொலை செய்தவர்கள் ஜனாதிபதியை குற்றம் சாட்டுகின்றனர்

## கல்விஅமைச்சர்

(கொழும்பு)

மக்களை கொலை செய்து மனித உரிமை மீறல் செய்தவர்கள் இன்று ஜனாதிபதியை மனித உரிமை மீறல் செய்ததாக குற்றம் சாட்டுகின்றனர் என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட ஸாவிய்யா மகளிர் வித்தியாலயக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், இந்த நாட்டில் மனித உயிரகளை இரக்கமின்றி கொலை செய்த புலிகளும் அவர்களுக்குச் சார்பானவர்களும் இன்று ஜனாதிபதியை மனித உரிமை மீறல் செய்ததாகக் குற்றம் சாட்டு கின்றனர்.

காத்தான்குடியின் இரண்டு பள்ளிவாசல்களிலும் தொழுகையில் ஈடுபட்டுக்கொணடிருந்த முஸ்லிம்களையும் புலிகள் கொலை செய்தார்கள். இந்த நிலையில் ஜனாதிபதியை மனித உரிமை மீறல் செய்ததாக குற்றம் சுமத்தி ஜனாதி பதிக்கும் அரசாங்கத்திற்கும எதிராக சூழ்ச்சி செய்கின்றனர்.

இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களின் உரிமைகளும் இந்த அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ளன. அனைவரும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்கின்றனர். அனைத்து மக்களின் உரிமைகளும் ஜனாதிபதயினாலும் அரசாங்கத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நாடு அனைத்து இன மககளுக்கும் சொந்தமானதாகும். கஷ்ரத்திலும் அமைதியற்ற நிலையிலும் இருந்த நாம் இன்று நிம்மதியாக இருக்கின்றோம்.

இன்று இந்த நாட்டில் முஸ்லிம பெண்கள் கல்வித்துறையில் பாரிய முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றனர். வைத்தியத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் முஸ்லிம் பெண்கள் முன்னேற்றம் கண்டு வருகின்றனர். இதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.

**முதலாவதாக கூட்டுள்குள தரப்பட்டுள்ளவை தொடர்ந்து வரும் விடைகளுள் எதனுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு டையது எனத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

32) (மேகம் / நீர் / ஆவி)
1) வானம் 2) மனிதன்
3) மழை 4) விவசாயம்

33) (நீர் / மீன்கள் / கப்பல்)
1) ஆறு 2) வானம்
3) கடல் 4) மனிதன்

34) (நட்சத்திரம் / சந்திரன் / வௌவால்)
1) இரவு 2) பகல்
3) மேகம் 4) சூரியன்

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

35. ஒரு குறும்புக்காரச் சிறுவன் அறை ஒன்றினுள் ஒளிந்துகொண்டு தான் இருக்கும் இடம் பற்றிய தவறான தகவலை எழுதி தொங்கவிட்டுக் கொண்டு ஒளித்துக் கொண்டான். அவன் ஒளிந்து இருக்கும் அறையைச் சரியாகக் கண்டு அறியுங்கள்.
1) அறை 1 2) அறை 2 3) அறை 3 4) அறை 4

| | | | |
|---|---|---|---|
| நான் 2 ஆம் அல்லது 3 ஆம் அறையில் உள்ளேன். | நான் 1 ஆம் அல்லது 4 ஆம் அறையில் உள்ளேன். | நான் இந்த அறையில் உள்ளேன். | நான் இந்த அறையில் இல்லை. |

36. கீழ் உள்ள பின்னங்களில் பெறுமதி உயர்வானது?
1) 1/2 2) 1/4 3) 1/5 4) 1/10

**பின்வருவனவற்றில் தவறான சேர்மானமானது எது?**

37)

| பகுதி | மூளை | இதயம் | சிறுநீரகம் | இரைப்பை |
|---|---|---|---|---|
| தொழில் | சிந்தனை | புரிந்துணர்வு | கழிவகற்றல் | சமிபாடு |
| | 1) | 2) | 3) | 4) |

**சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

38) பின்வரும் கோலத்தை அவதானியுங்கள்.

| | | |
|---|---|---|
| 1 | 2 | 4 |
| 1 | 2 | 4 |
| 1 | 2 | 4 |
| 11 | 22 | 44 |
| 111 | 222 | 444 |
| 125 | 250 | 500 |

**இதன் பிரகாரம் 8 எனும் இலக்கம் 8 தடவைகள் பயன் படுத்தப்படின் பெறப்படும் விடை என்ன? (அவதானிப் பதன் மூலம் விடை எழுதுக)**

39) $999\frac{9}{9}$ இற்கும் $99\frac{9}{9}$ இடைப்பட்ட வித்தியாசம் எவ்வளவு? [.............................................]

40) ஒருவர் கிழக்குத் திசையை மேற்குத் திசை எனக் கருதுகின்றார் எனின் அவர் தென்மேற்குத் திசையை என்ன திசை எனக் கருதுவார்?

[.............................................]





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி : I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு

வெளியீடு 33



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01 எமக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் சிலவற்றினைக் குறிக்கும் இலச்சினைகள் கீழே தரப்பட்டுள்ளன. 01 முதல் 05 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சேவைகளுடன் மேற்படி நிறுவனங்களைத் தொடர்புபடுத்தி அவற்றினைக் குறிக்கும் இலக்கத்தை எழுதுக.**

01) 02) 03) 04) 05)

06) 07) 08) 09) 10)

01. மின்சாரம் வழங்கல் [.............................................]

02. காப்புறுதி செய்தல் [.............................................]

03. காசுக்கட்டளை மாற்றுதல் [.............................................]

04. காசோலை மாற்றுதல் [.............................................]

05. தொலைவில் உள்ள ஒருவருடன் உரையாடல். [.............................................]

**சரியான விடையைத் தெரிவு செய்க**


06. பின்வருவனவற்றுள் எது நெட்டாண்டு ஆகும்.
1) 2006 2) 2008 3) 2010 4) 2011

07)

| | |
|---|---|
| கணிதம் I | 08.30h - 09.15 h |
| கணிதம் II | 09.45h - 11.15 h |

இரண்டு வினாத்தாள்களுக்குமாக வழங்கப்படும் நேரம் எத்தனை மணித்தியாலயம்?


1) 45 நிமிடம் 2) 1 மணித்தியாலம் 3) 2 மணி 15 நிமிடம் 4) 2 மணி 30 நிமிடம்

08) 


அருகே உள்ள கோடு B யின் நீளம் என்ன?

1) o mm 2) o cm 3) 4 mm 4) 4 cm


09) பின்வருவனவற்றில் எது சதுரம் ஒன்றின் பக்க நீளமாக அமையும்.
1) 5, 5, 10, 10 2) 4, 8, 4, 8 3) 5, 5, 5, 5 4) 6, 6, 6

10) 
அருகேயுள்ள உருவில் எத்தனை சதுரமுகிகள் உள்ளன.
1) 2 2) 9 3) 16 4) 18


**11. தவறான தொடர்பின் கீழ்க் கோடிடுக.**




**12. பொருத்தமற்ற சேர்மானத்தின் கீழ்க் கோடிடுக.**




**13. பொருத்தமற்ற இயல்பின் கீழ்க் கோடிடுக.**




**சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

14. ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா - என்ற சிறுவர் பாடலைப் பாடியவர்? [..............................]

15. வானையும் பூமியையும் இணைக்கும் வருணனின் கொடை எது? [..............................]

16) யானைகளைக் கட்டுப்படுத்தும் சின்னக்குச்சியின் பெயர் என்ன? [..............................]

17) "பரி" என்ற சொல் தமிழில் எந்த விலங்கைக் குறிக்கும்? [..............................]

18) "கிறிஸ்மஸ்" தினத்தோடு தொடர்புடைய இனிப்புப் பொருள் எது? [..............................]

**19 ஆம் 20 ஆம் வினாக்களில் நிரல் 1 இல் உள்ளவற்றுடன் சரியாகத் தொடர்புபடும் விடையை நிரல் 2 இல் இருந்து தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டுக்குள் எழுதுக.**

(இங்கு நான்கு விடைகளும் சரியாகத் தொடர்பு படுத்தப்பட்டால் மட்டுமே புள்ளி வழங்கப்படும்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | 1 உழவு | - | முற்றியகதிர் | ☐ | 20) | ① சீருடை | - இயந்திரம் ☐ |
| | 2 விஷம் | - | மாளிகை | ☐ | | ② ஆண் | - காவலர்கள் ☐ |
| | 3 வெள்ளை | - | ஏர் | ☐ | | ③ தையல் | - அரண்மனை ☐ |
| | 4 அறுவடை | - | பாஷாணம் | ☐ | | ④ மன்னர்கள் | - பெண் ☐ |



**கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை நன்கு அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுவர்களின் உரிமைகள் சாசனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சிறுவர்களின் உரிமைகள் முழுமையான எழுத்து மூலமாக தயாரிக்கப்பட்ட சாசனமாக இது திகழ்கிறது. இந்த சாசனத்தின்படி சிறுவர்களின் பாதுகாப்பும், அரவணைப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது.**

21) மேலே உள்ள தகவல் எதைப் பற்றியது? [..............................]

22) இது யாரால் நிறைவேற்றப்பட்டது? [..............................]

23) இதன் நோக்கம் என்ன? [..............................]

24) இலங்கையில் எத்தனை வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் சிறுவர்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது? [..............................]

25) இது மிகவும் முக்கியமானது ஏன்? [..............................]

**26 ஆம் 27 ஆம் வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியம் யாரால் கூறப்படுமிடத்து மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.**

26) "அமீர் கணித பாடத்தில் மிகவும் கெட்டிக்காரன்"
1) அமீரின் தாய் 2) அமீரின் சிநேகிதன் 3) அமீரின் கணித ஆசிரியை

27) "றிசானா சரியாக சாப்பிடமாட்டாள்"
1) றிசானாவின் வகுப்பு ஆசிரியை 2) றிசானாவின் தாய் 3) றிசானாவின் அண்ணா


**தரப்பட்ட கூற்றுக்கு அமைய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

28) சில குரைக்கும் நாய்கள் கடிக்காது. எங்கள் வீட்டு நாய் குரைக்கும். அப்படியாயின் எங்கள் வீட்டு நாய்.
1) கடிக்கும் 2) கடிக்காது 3) நிச்சயித்துச் சொல்ல முடியாது.


29) அவன் அரைகுறை ஆடையுடன் நொண்டிக்கொண்டு பாதையில் செல்கிறான். தலையில் கைக்குட்டை ஒன்றை போட்டுள்ளான். அவனது கையில் ஒரு போத்தல் இருக்கிறது. இந்த மனிதன்
1) நோயாளி 2. குடிகாரன் 3) சோம்பேறி

**30 ஆம் 31 ஆம் வினாக்களில் உள்ள முதலாவது படம் ஒரு கடதாசியை சமமாக நான்காக மடித்து அதில் ஒரு பகுதியை வெட்டிய பின்னர் தெரியும் விதமாகும். எதிரே உள்ள மூன்று படங்களில் எந்தப் படம் விரிக்கப்பட்ட முதலாவது படத்துக்குப் பொருத்தமானது எனத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30)




31)





புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றபோது விருந்தினர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் வெற்றி பெற்ற மாணவனுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கேடயம் வழங்குவதையும் காணலாம். (69)

# வடமராட்சி பாடசாலைகளின் பெரு விளையாட்டு முடிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் மட்டத்தில் நடத்தப்பட்ட பெருவிளையாடடுப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### மேசைப்பந்து

**19 வயதுப் பெண்கள்**

முதலாமிடம் - வல்வை மகளிர் வித்தியாலயம், இரண்டாமிடம் - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் -வடஇந்து மகளிர் கல்லூரி.

**19 வயது ஆண்கள்**

முதலாமிடம் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

### சதுரங்கப்போட்டி

**15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூர், இரண்டா மிடம் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, மூன்றாமிடம் -நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

**19 வயது ஆண்கள்**

முதலாமிடம் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - புற்றளை மகா வித்தியாலயம்.

**15 வயதுப் பெண்கள்**

முதலாமிடம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பெண்கள**

முதலாமிடம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

### உதைபந்தாட்டம்

**19 வயதுப் பெண்கள்**

முதலாமிடம் - கரவெட்டி விகனேஸ்வராக் கல்லூரி, இரண்டாமிடம் - சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, மூன்றாமிடம் - வட இந்து மகளிர் கல்லூரி.

### பூப்பந்து

**15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலம், இரண்டாமிடம் - தும்பளை சிவப்பிரகாச வித்தியாயலம், மூன்றாமிடம் - கம்பர் மலை வித்தியாலயம்.

**19 வயது ஆண்கள்**

முதலாமிடம் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**15 வயதுப் பெண்கள்**

முதலாமிடம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - வல்வை மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பெண்கள்**

முதலாமிடம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - வடஇந்து மகளிர் கல்லூரி. (116)

# மாவட்ட கரப்பந்தாட்டத்துக்கு நவஜீவன் அணி முன்னேறியது

மஞ்சி பிஸ்கட் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தென்மராட்சி, வடமராட்சி அணிகள் மோதின. கரபபநதாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதல் சுற்றில் மட்டுவில் ஐங்கரன் - கைதடி நவசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடி 2:1 என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

கால்இறுதி ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணி- மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடியதில் 2:0 என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

மற்றைய கால் இறுதி ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி அணி கைதடி குமரநகர் அணியை 2:0 என்ற கணக்கில் வெற்றியீட்டியது:

அரை இறுதிப்போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிரத்து 2:0 என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் அணி மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து 3:0 என்ற கணக்கில் வெற்றியீட்டிச் சம்பியனானது.

உடுப்பிட்டி நவஜீவன் அணி மாவட்டப்போட்டிக்குத் தெரிவாகியது. (118)

# முக்கியத்துவத்தை உணர்ந்து விளையாட்டு முறையூடான கற்பித்தல்

— பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் —

மாணவர் மத்தியில் ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்வதில் விட்டுக்கொடுக்கும் பணபுகளை வளர்ப்பதில், விளையாட்டுச் செயற்பாடுகள் பங்களிப்புக்களை வழங்குகின்றன. வெறுமனே ஏட்டுக் கல்வி மாத்திரம் பூரணத்துவம் உள்ள மனிதனை உருவாக்க மாட்டாது.

இணைக் கலைத் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் விளையாட்டுச் செயற்பாடுகள், கல்விச் செயற்பாடுகளுடன் இணைவதனூடாகவே முழுமையான ஆளுமைமிக்க மாணவரை உருவாக்க முடியும் என்று யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தெரிவித்தார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வலலுநர் போட்டி நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பாடசாலையின் 400 மீற்றர் சுற்றுவட்ட மைதானத்தில் பிரதி அதிபர் தயாராணி மனோகரன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலையின் முனனாள் அதிபரும் தற்போதைய யாழ் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய இ.குணநாதன் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்.

விளையாட்டுச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தமையால் இன்றைய கல்வி முறைமையில் விளையாட்டுச் செயற் பாடுகளின் ஊடான கற்றலைக் கல்வியாளர் கள் சிபார்சு செய்கின்றனர்.



பல்கலைக் கழகத் தெரிவின்போதும் பல் வேறு புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்போதும் விளையாட்டுச் செயற்பாடுகளின் போது ஈட்டிய வெற்றிகள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

அத்தியார் இந்துக் கல்லூரியில் 400 மீற்றர் சுற்றுவட்ட முள்ள மைதானம் அமைந்திருப்பது மாணவர்களுக்கு மாத்திரமல்ல வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தவர்களுக்கே வாய்ப்பாக உள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இந்தக் கல்லூரியில் இருந்து தேசிய மட்டத்திற்குச் செல்லும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றார்.

# மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் ம.வி.யின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை முதல்வர் ஜ.குகானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திர குமார் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஓய்வு பெற்ற கிளிவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா, கிளிநொச்சி பொது வைத்தியசாலை வைத் திய அதிகாரி செ.சுகந்தனும் கலந்துகொள்கின்றனர். (112)

# மன்னாங்கண்டல் மாணவர்கள் வெற்றி

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் பின்தங்கிய கிராமப் பாடசாலையான மன்னாங் கண்டல் பாடசாலை மாணவர்கள் இருவர் வெற்றி பெற்றுள்ளனர்.

பின்தங்கிய பிரதேச பாடசாலை மாணவர்களான மன்னாங்கண்டலைச் சேர்ந்த மே.விஜிதரன்,கே.தேவராஜாஆகிய இரு மாணவர்களுமே வெற்றி பெற்றுள்ளனர். (141)

# வீரர்களுக்குப் பயிற்சி முகாம்

யூடோ, கராத்தே, மல்யுத்தம், குத்துச்சண்டை, wushu (AR) உதைபந்து, கபடி, வலைப் பந்து, கரப்பந்தாட்டம், மெல்வல்லுநர் ஆகிய விளையாட்டுக்களுக்கான பயிற்சி முகாம் பங்குனி மாதத்திலிருந்து நடத்தப்படவுள்ளது.

மத்திய விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் மாதாந்தம் ஒவ்வொரு பயிற்சி முகாம் வீதம் ஒவ்வொரு மாதமும் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களுக்கான உணவு வசதிகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

பங்கு பற்றுநர்கள் பாடசாலை மற்றும் விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (93)

# வலிகாமம் வலயப் பூப்பந்தாட்டம்

வலிகாமம் கல்வி வலையப் பாடசாலைகளில் பூப்பந்தாட்டட இறுதிப்போட்டி மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

**15 வயது ஆண்கள்**

மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து விளையாடி 2:1 என்ற அடிப்படையில் உடுவில் மான்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

**19 வயது ஆண்கள்**

மானிப்பாய் இந்துக் கல்லூரி உடுவில் மான்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடி 3:1 என்ற அடிப்படையில் மானிப்பாய் இந்து சம்பியனானது.

**15 வயதுப் பெண்கள்**

உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை 2:0 என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

**19 வயதுப் பெண்கள்**

உடுவில் மான்ஸ் கல்லூரியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியதில் 2:0 என்ற கணக்கில் வெற்றியீட்டி உடுவில் மான்ஸ் கல்லூரி சம்பியனானது. (93)


# சங்கரன் கோவில் தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற வேண்டும்

(கோவில்பட்டி)

சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் ஜெயலலிதா சவாலை முறியடித்து தி.மு.க வேட்பாளரை வெற்றி பெறச்செய்ய வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கூறினார்.

கோவில்பட்டியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகி இளஞ்சேகரன் இல்ல திருமண வரவேற்பு விழா நடந்தது.

இதில், திருமாவளவன் பேசியதாவது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தி.மு.க கூட்டணியில்தான் உள்ளது. சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் ஜெயலலிதா சவால் விட்டு அ.தி.மு.க வெற்றிக்காக 32 அமைச்சர்களையும் களம் இறக்கியுள்ளார். ஜெயலலிதாவின் சவாலை முறியடித்து தி.மு.க வேட்பாளர் ஜவகர் சூரியகுமாரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.



அ.தி.மு.க ஆட்சியில் தினமும் 8 மணி நேரத்துக்கும் மேலாக மின்வெட்டு உள்ளது. இதனால் தமிழகம் இருண்ட மாநிலமாக மாறிவிட்டது. பால் விலை, பஸ் கட்டண உயர்வால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டது. வங்கி கொள்ளையில் ஈடுபட்ட 5 பேரை பிடித்து பொலிஸார் விசாரித்து இருக்க வேண்டும். ஆனால், அவர்களை சுட்டுக் கொன்றது மனித உரிமையை மீறிய செயல் என்றார்.

## தவக்காலச் சிந்தனை



### இந்தப் பக்கங்களைப் புரட்டிப் படியுங்கள்...

| | |
|---|---|
| துயருற்றிருக்கும் வேளையில் | - யோவான் 14 |
| மனிதர் கைவிடும்போது | - திருப்பாடல் 27 |
| கவலையான் நேரத்தில் | - மத்தேயு 6:19-34 |
| இறைவன் தூரத்தில் இருப்பது போல் தோன்றும் போது | - திருப்பாடல் 137 |
| தனிமையும், அச்சமும் நிறைந்து வருந்தும் வேளையில்... | - திருப்பாடல் 23 |
| கிறிஸ்தவத்தின் அர்த்தத்தை உணர | - 1 கொரிந். 5:15-19 |
| அமைதியும் ஓய்வும் வேண்டும்போது | - மத்தேயு 11:25-30 |
| இறைவனைவிட உலகம் பெரிதாகத் தோன்றும்போது | - திருப்பாடல் 8:1-30 |
| மனிதர் இரக்கமற்றவர்களாகக் காணப்படும்போது | - யோவான் 15 |
| தொழில் அல்லது பயணத்துக்காக புறப்படும்போது | - திருப்பாடல் 121 |
| ஆபத்தான வேளையில் | - திருப்பாடல் 91 |
| பாவத்தில் வீழ்ந்தவேளையில் | - திருப்பாடல் 51 |

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# வங்கிக் கொள்ளையர் விவகாரம் வழக்கு உளவுத்துறைக்கு மாற்றம்

(சென்னை)

வங்கிக் கொள்ளையர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பான வழக்கை உளவுத்துறைக்கு மாற்ற ராமானுஜம் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் சென்னையில் வங்கிக்கொள்ளையில் ஈடுபட்ட 5 வட மாநில கொள்ளையர்களை சென்னை பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

தற்போது இந்த என்கவுன்டர் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளது. மேலும் தேசிய மனித உரிமை ஆணையம் இதுகுறித்து விசாரிக்க தமிழக அரசுக்கு நோட்டீஸ் ஒன்றும் அனுப்பியுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கை உளவத்துறைக்கு மாற்ற பொலிஸ் ராமானுஜம் உத்தரவிட்டுள்ளார். மேலும் வங்கிக்கொள்ளையர்கள் கொல்லப்பட்ட பின்பு நடத்தப்பட்ட சோதனையில் ஏராளமான பணங்களும், அவர்களுடைய வாக்காளர் அட்டைகளும் கண்டு பிடிக்கப்பட்டது. வாக்காளர் அட்டையில் ஏற்பட்ட சில குழப்பங்கள் காரணமாக், கொள்ளையர்களுடைய உண்மையான முகவரியை கண்டறிய அவர்களுடைய கை ரேகை, புகைப்படம் போன்றவற்றை நாட்டிலுள்ள எல்லா மாநிலத்திற்கும் அனுப்பியுள்ளோம் என்று தமிழ்நாடு கொமிஷனர் திரிபாதி கூறியுள்ளார்.

# பிரபல நடிகர் நாகார்ஜுனா அரசியலில் குதிக்க திட்டம்

## திருப்பதியில் பரபரப்பு பேட்டி


(ஐதராபாத்)

பிரபல தெலுங்கு நடிகர் நாகார்ஜுனா விரைவில் அரசியலில் குதிக்க முடிவு செய்துள்ளார். தெலுங்கு சூப்பர் ஸ்டார்களில் ஒருவர் நாகார்ஜுனா. பழம் பெரும் தெலுங்கு நடிகர் நாகேஸ்வரராவின் மகன். 52 வயதாகும் நாகார்ஜுனா தமிழ், தெலுங்கு, இந்தி என பல்வேறு மொழி படங்களில் நடித்துள்ளார். நடிகை அமலாவின் கணவர். இவருடைய 2 மகன்களில் ஒருவரான நாக சைதன்யா தெலுங்கு படங்களில் கதாநாயகனாக நடிக்கிறார். மற்றொரு மகன் அகிலும், விரைவில் திரையுலகத்துக்கு வர உள்ளார். ஆந்திராவில் நடிகர் சிரஞ்சீவி அரசியலுக்கு வந்து, பிரஜா ராஜ்யம் என்ற கட்சியை தொடங்கினார். கடந்த சட்டப்பேரவை தேர்தலில் அவருடைய கட்சியை சேர்ந்த



18 பேர் எம்எல்ஏக்கள் ஆகினர். அவர்களுடன் காங்கிரசில் சேர்ந்து விட்டார் சிரஞ்சீவி. மற்றொரு பிரபல நடிகரான பால கிருஷ்ணா, தெலுங்கு தேசம் கட்சியில் சேர்ந்து 2014ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட போவதாக சமீபத்தில் அறிவித்தார்.

இந்த நிலையில், திருப்பதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நகைக்கடை திறப்பு விழாவில் நாகார்ஜுனா கலந்து கொண்டார். அப்போது அரசியலுக்கு வருவது பற்றி நிருபர்கள் கேட்ட கேள்விக்கு, அரசியலை நான் ஆர்வமாக கவனிப்பவன். அதில் ஈடுபட வேண்டும் என்று நீண்ட காலமாக நினைக்கிறேன். ஆனால், அது எனக்கு சரிப்பட்டு வருமா என்று தெரியவில்லை. முன்னாள் முதல்வர் ராஜசேகர ரெட்டி அமுல்படுத்திய பல திட்டங்கள் எனக்கு பிடிக்கும் என்றார்.




# காஷ்மீரில் மோதல் பயங்கரவாதிகள் பலி

(காஷ்மீர்)

காஷ்மீரில் பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பயங்கரவாதிகள் இருவர் பலியாகியுள்ளார்.

காஷ்மீரில் இரு பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஜம்மு-காஷ்மீர் மாநிலம் தூல் மற்றும் கீட்ஸ்வார் பகுதியின் வனப்பகுதியில் பயங்கரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்புப் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இந்த தகவலின் பேரில் அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதிகளைச் சுற்றி வளைத்தனர்.அப்போது பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்தச் சண்டையில் இரு பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

# நானும் அரசியல்வாதிதான் தேர்தலில் போட்டியிடுவேன்

## நடிகர் வடிவேலு

(சென்னை)

காலமும், சூழ்நிலையும் நிர்ப்பந்திக்கும் போது மக்களைச் சந்திப்பேன். நான் யாருக்கும் பயந்து ஓடி ஒளிந்து கொள்ளமாட்டேன்.

தீவிர அரசியலில் குதிப்பேன். அரசியலுக்கு நான் வரக்கூடாது என்று சொல்வது அபத்தம். நிச்சயமாக அரசியலுக்கு வந்தே தீருவேன். என்னை யாரும் தடுக்க முடியாது என்று நடிகர் வடிவேலு தெரிவித்துள்ளார்.

கடந்த சட்டமன்ற தேர்தலில் திமுகவுக்கு ஆதரவாக தீவிர பிரசாரம் மேற்கொண்டார் நடிகர் வடிவேலு. அத்தேர்தலில் அதிமுக வெற்றி பெற்றது முதல் நடிகர் வடிவேலும் சினிமாவில் இருந்து ஓரங்கட்டப்பட்டுவிட்டதாக பேசப்பட்டு வந்தது.

இந்நிலையில் சங்கரன்கோவிலில் இடைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில் திமுக வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து பிரசாரம் செய்வீர்களா? என்று வடிவேலுவிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, வடிவேலுவுக்கு அரசியல் எல்லாம் தேவையா என்று சிலர் கேட்கிறார்கள்.



வாக்குப் போடும் அத்தனை பேரும் அரசியல்வாதிகள்தான். வாக்குப் போடும் மக்களில் நானும் ஒருவன் என்பதால் நானும் அரசியல்வாதிதான். என் தாய் சரோஜினி, உடல் நலக்குறைவு காரணமாக மதுரை ஐராவத நல்லூரில் மருத்துவமனையில் உள்ளார்.

அதனால் என்னால் சங்கரன்கோவில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடமுடியவில்லை தேர்தலில் போட்டியிடுவீர்களா என்று என்னை கேட்கிறார்கள்.

திரையுலகம் என்னை ஒதுக்கி ஓரங்கட்டி விட்டதாக சொல்கிறார்கள். விரைவில் நான் கதாநாயகனாக நடிக்கும் புதுப்பட அறிவிப்பு வெளிவரும் என்று கூறியுள்ளார்.

# பயங்கரவாத தடுப்பு மையம்; எதிர்ப்புமனு நிராகரிப்பு

(சென்னை)

மத்திய அரசு அமைக்க உள்ள தேசிய பயங்கரவாத தடுப்பு மையத்தை எதிர்த்து தொடரப்பட்ட மனுவை, சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.


சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் விஜயலட்சுமி சண்முகம் என்பவர் தாக்கல் செய்த மனு தேசிய தீவிரவாத தடுப்பு மையத்தை அமைப்பது தொடர்பாக, மத்திய அரசு அறிவிப்பாணையை வெளியிட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதாக இது உள்ளது. இந்த முடிவை எடுப்பதற்கு முன், மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஆலோசிக்கவில்லை. மாநிலங்களின் அதிகாரங்களை, மத்திய அரசு பறிப்பது போல் உள்ளது. இந்த அறிவிப்பாணையை இரத்து செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

மனுவை தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி அருணாஜெகதீசன் ஆகியோர் முதல் அமர்வை விசாரித்தனர். மத்திய அரசு சார்பில் வழக்கறிஞர் எஸ்.சீதாலட்சுமி ஆஜரானார்.

திகதியில்லாத இந்த அறிவிப்பாணையை எங்கிருந்து பெற்றார் என்கிற கேள்விக்கு, மனுதாரரின் வழக்கறிஞரால் எங்களை திருப்திப்படுத்த முடியவில்லை.

இந்த விஷயம் தொடர்பாக மத்திய அரசுக்கும் வெவ்வேறு மாநிலங்களுக்கும் இடையே விவாதங்கள், ஆலோசனைகள் நடந்து வருகிறது என்பதும், இறுதி அறிவிப்பாணை இன்னும் வெளியிடப்படவில்லை என்பதையும் இந்த நீதிமன்றம கவனத்தில் கொண்டுள்ளது. எனவே, இந்த ரிட் மனுவை விசாரணைக்கு ஏற்க விரும்பவில்லை. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது..

# ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த வீடு தரைமட்டம்



(அம்பொட்டபாத்)

கடந்தவருடம் மே மாதத்தில் பாகிஸ்தானில் வைத்து அல்-கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்க விசேட கொமாண்டோக்களின் திடீர் தாக்குதலில கொல்லப்பட்டிருந்தார்.

பாகிஸ்தானின் அப்பொட்டாபாத் நகரத்தில் இருக்கின்ற, ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த வீட்டினை அதிகளவான மக்கள் சென்று பார்த்து வந்தனர். மூன்று மாடிகளைக் கொண்ட குறித்த வீட்டினைச் சுற்றி பாரிய மதில்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே பாகிஸ்தானின் உயரதிகாரிகளினால் ஒசாமா பின்லேடன் கொலை செய்யப்பட்ட குறித்த வீடு நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடிக்கப்பட்டுள்ளது.

தெரு விளக்குகளை அணைத்துவிட்டு பலத்த இராணுவ, பொலிஸ் பாதுகாப்பின் மத்தியில் பாரிய இயந்திரங்களைக் கொண்டுவந்து ஒசாமாவின் வீட்டினை இடிக்க ஆரம்பித்ததாக சம்பவத்தை நேரில் கண்ட அயலவர்கள் வெளிநாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# இளவரசர் தப்புவது கடினம்



(அம்ஸ்டர்டாம்)

பனிச் சறுக்கல் விளையாட்டின்போது விபத்துக்குள்ளான நெதர்லாந்து இளவரசர், இனி நினைவு திரும்பாமலேயே இறந்து போகலாம் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். நெதர்லாந்து நாட்டு அரசி பீட்ரிக்ஸின் இரண்டாவது மகன் இளவரசர் ஜெஹான் பிரிசோ சுமார் 25 நிமிடங்கள் பனியில் புதையுண்டு இருந்த நிலையிலேயே மீட்கப்பட்டிருந்தார்.

மீட்கப்பட்டபோது அவருக்கு உயிர் இருந்தாலும், ஒட்சிசன்இன்மையால் மூளை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது கோமா நிலையில் உள்ள அவருக்கு நினைவு திரும்புவதென்றால் குறைந்தபட்சம் சில வருடங்களாவது எடுக்கும். அதேநேரத்தில், நினைவு திரும்பாமலே அவர் இறந்துபோக சந்தர்ப்பம் அதிகம் என அரண்மனை டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாந்து இளவரசர் கடந்தவாரம் பனிச் சறுக்கல் விளையாட்டுக்காக ஆஸ்திரியா சென்றிருந்தார். டச்சு அரச குடும்பத்தினர் ஒவ்வொரு வருடமும் பனிச் சறுக்கல் விளையாட்டுக்காக ஆஸ்திரியா செல்வது வழக்கம். ஆல்பைன் கிராமத்தைச் சேர்ந்த தனது பால்ய நண்பனுடன் பனிச் சறுக்கல் விளையாட்டில் ஈடுபட்டார் இளவரசர்.

கடந்த வாரம் முழுவதும் ஆஸ்திரியாவின் இந்தப் பகுதியில் கடும் பனி வெடிப்புச் சரிவுகள் ஏற்படலாம் என்ற காலநிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இளவரசர் அதை அலட்சியப்படுத்திவிட்டு பனிச் சறுக்கலில் ஈடுபட்டபோது, அவர் சறுக்கிச் சென்ற நிலம் சரிந்து அவரை முழுமையாக மூடிக் கொண்டது.

அவருடைய நண்பர் பனிச் சரிவுகளுக்கான காற்றுப்பை ஒன்றை வைத்திருந்ததால் உயிர் தப்பினார். பனியில் புதைந்து போன இளவரசர் பாதுகாப்பு காரணங்களுக்காக தமது உடலில் சிக்னல் கொடுக்கும் கருவி ஒன்றை பொருத்தியிருந்தார். அந்தக் கருவி கொடுத்த சிக்னலின் உதவியுடன்தான் அவரை வெளியே கொண்டுவர முடிந்திருந்தது.

# மாயன் நாகரிகம் அழிந்தது எப்படி?

(லண்டன்)



உலகின் மிகத் தொன்மையான மாயன் நாகரிகம், சுவடே இல்லாமல் அழிந்தது எப்படி என்பதை, மெக்சிகோ மற்றும் பிரிட்டனை சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


இன்றைய மத்திய அமெரிக்காவை சேர்ந்த மெக்சிகோ, கவுதமாலா, ஹோண்டுராஸ் ஆகிய நாடுகளில், கி.மு. 2500 முதல் கி.பி 950 வரை பரவியிருந்தது மாயன் நாகரிகம். வானியல், கணிதம், கட்டடக் கலை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய இந் நாகரிகம், கி.பி. 950களில் சுவடே இல்லாமல் அழிந்துவிட்டது. இதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், கொடும் பஞ்சம், பங்காளிச் சண்டைகள், ஸ்பெயின் நாட்டவரால் கொண்டு வரப்பட்ட அம்மை நோய் என சில காரணங்கள் குறிப்பிட்டு பேசப்படுகின்றன. இந்நிலையில், மெக்சிகோவின் அறிவியல் ஆய்வுக்கான யுகடான் மையம் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த சவுதாம்ப்டன் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் சேர்ந்து சமீபத்தில், யுகடான் தீபகற்பம் என அழைக்கப்படும் மெக்சிகோவின் தென் பகுதியில் ஆய்வுகளை நடத்தின. இப்பகுதி தான் மாயன் நாகரிகத்தின் மையமாகத் திகழ்ந்த இடம். இங்கு ஏற்பட்ட கொடுமையான பஞ்சம் தான், மாயன் நாகரிகத்தின் அழிவிற்கு வித்திட்டது என இதுவரை விஞ்ஞானிகள் கூறி வந்தனர்.

ஆனால், சமீபத்தில் இப்பகுதியில், கி.பி. 800 முதல் கி.பி. 950 வரையிலான காலகட்டத்தில், நீர் நிலைகளில் நிகழ்ந்த ஆவியாதல் குறித்து கணக்கீடுகள் எடுக்கப்பட்டன. அதன்படி இப்பகுதியில், ஆண்டுதோறும் பெய்யும் மழையளவில் 25 முதல் 40 சதவீதம் அளவிற்கு மழை வளம் குறைந்ததே. அதாவது மிகச் சிறிய அளவிலான பஞ்சமே மாயன் நாகரிக அழிவிற்குக் காரணம் எனத் தெரியவந்தது.

இதுகுறித்து, சவுதாம்ப்டன் பல்கலைக் கழகத்தின் எல்கோ ரோலிங் கூறுகையில், இப்பகுதியில் உள்ள திறந்த வெளி நீர் நிலைகளில் அதிகளவு ஆவியாதல் நிகழ்ந்ததால், திறந்த வெளி நீர் நிலைகளில் நீர் மட்டம் வெகுவாக குறைய ஆரம்பித்தது. இதனால் நீர்ப் பஞ்சம் உருவானது. அதன் விளைவாக, மக்கள் நகரங்களை விட்டுச் செல்ல தொடங்கினர் என்றார்.

அதோடு, எங்கெல்லாம் அதிகளவில் நீர் ஆவியாதல் நிகழ்கிறதோ, அங்கெல்லாம் இதுபோன்று மிகச் சிறிய அளவிலான பஞ்சங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

# மண்டேலா வைத்தியசாலையில்



(ஜோகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா (வயது- 93) நீண்ட காலமாக குடலிறக்க நோயால் அவதிப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இதனால் நேற்று முன்தினம் திடீரென மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதையடுத்து, அவர் நலமுடன் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விரைவில் அவர் வீடு திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உடல் நலக் கோளாறால் அவதிப்பட்டு வந்த மண்டேலா, கடந்த மாதம் தான், தனது சொந்த ஊரான கிழக்கு கேப் என்ற இடத்தில் உள்ள தனது வீட்டிற்குத் திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

சோடாப் போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்குவதற்கு வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0778980150, 0758371308 இற்கு தொடர்பு கொள்ளவும்.

நல்லூரடியில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு சிறு பிள்ளையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலை செய்வதற்கும் பெண் உதவியாளர் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு உணவு, தங்குமிடம் இலவசம் ஆர்வம் உள்ளவர்கள் 075048186 இற்கு தொடர்பு கொள்ளவும்.

சாவகச்சேரியில் இயங்கும் புடைவைக்கடைக்கு விற்பனையாளர்கள் இருபாலாரும் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இன்று காலை 08 மணிக்குப் பின்னர் யாழ் ரெக்ஸ், இல.13A, நவீன சந்தை சாவகச்சேரி எனும் முகவரியில் உள்ள கடைக்கு நேரில் வரவும்.

யாழ் நகரப்பகுதியில் இயங்கும் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு கணினித் தட்டச்சு, போட்டோப்பிரதி எடுத்தல் போன்றவற்றில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0775380981 இற்கு தொடர்பு கொள்ளவும்.

நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்றிற்கு யாழில் பணியாற்ற, பொறியியலாளர் ஒருவர் திட்ட முகாமையாளராக பணியாற்றுவதற்கு, தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொழில் நுட்பவியலாளர், data entry operator பாரம் தூக்கியுடன் கூடிய கனரக வாகனச் சாரதி தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் எதிர்வரும் 9 நாட்களுக்குள் சுயவிபரக்கோவையை group managers (HRD)@ Admin Luminex (pvt) ltd இற்கு 0112642999 என்ற தொலைநகலுக்கு அல்லது luminex@slt.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

வைற் ஹவுஸ் அந்திய கால சேவை வாகனத்தில் கடமை புரிய சாரதி உடன் தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் உள்ளவர் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் வைற் ஹவுஸ், 180 பிரதான வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

யாழ்ப்பாணத்தில் பணியாற்ற கணக்கு உதவியாளர், விற்பனைப் பிரதிநிதிகள்(இருபாலாரும்), தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையை anfccolombo@sltnef.lk இற்கு அனுப்பிவைக்கவும்.

எடிசலாட் தொலைத்தொடர்பு வலையமைப்பில் பணியாற்ற விற்பனை மேம்பாட்டு அதிகாரி, நேரடி விற்பனையாளர், (freelancer) தேவை. ஆர்வமுள்ளவர்கள் 29ஆம் திகதிக்கு முன்னர் சுயவிபரக் கோவையுடன் etisalat, R@R Telecom jaffna (pvt) ltd, 127.K.K.S Road, jaffna என்ற முகவரிக்கு 9-12 மணிவரை நேரில் சமூகம் தரவும்.

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, நல்லூர் ஆகிய இடங்களில் பணியாற்ற English Teacherrs/Trainee English Teacher computer instructors, fild officers, marketiong officers, Beauty theropy, instructors, reccptionst, secretary தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேர்முகத தேர்வுக்கு பதிவு செய்ய 0778925895 இற்கு தொடர்பு கொள்ளவும்.

சர்வதேச sos சிறுவர் கிராமத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் இயங்கும் sos சிறுவர் கிராமத்தில் வதிவிட பெண் கல்வியாளர், மருத்துவத்தாதி (பெண்) பராமரிப்பு உத்தியோகத்தர் (ஆண்-வதிவிட உத்தியோகத்தர்) தேவை ஆர்வமுள்ளவர்கள் 29ஆம் திகதிக்கு முன்னர் அருச்சுணன் சுவாமிநாதன், உதவிப் பணிப்பாளர், எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம், இல276 கனகரட்ணம் வீதி, நல்லூர். அல்லது arjunan.swaminathan@soscvsrilanka.org அனுப்பி வைக்கவும்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக இயங்கும் தேனீர்ச் சாலைக்கு ரீமேக்கர், பரிமாறுபவர், றொட்டி தயாரிப்பாளர், சமையலாளர் உடன் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தனுஷ் கபே 66, மணிக்கூட்டுக் கோபுர வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

கணினி அறிவுள்ள கணக்கு வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிரக் கோவையுடன் மயூரா டிஸ்ரியூட்டர்ஸ் இல.25, நவீன சந்தை மேல் மாடி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

கொழும்பு வெள்ளவத்தையில் தமிழ்க் குடும்பம் ஒன்றிக்கு வீட்டு வேலை செய்ய, ஓரளவு சமைக்கத் தெரிந்த பணிப்பெண் தேவை. வயதெல்லை 45, ஆர்வமுள்ளவர்கள் 0715350914 இற்கு தொடர்பு கொள்ளவும்.


கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வர் ஆலயத்திற்கு முகாமையாளர் ஒருவர் உடன் தேவை. சமய ஆசாரமுடைய 25வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

மகாதேவா ஆச்சிரமத்தில் பணியற்ற கணினியில் வடிவமைப்பு, மின்னஞ்சல் பாவனை தெரிந்த ஆண் வேலைக்குத் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 03.03.2012 இற்கு முன்னர் தி.இராசநாயகம், மகாதேவா ஆச்சிரமம் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர் கிளிநொச்சி எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

யாழ் நல்லூர் பகுதியில் இயங்கும் தொழில் பட்டறைக்கு கேற், கிறில் செய்யக்கூடிய வெல்டர், பழகவிரும்புவர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0773760594 இற்கு தொடர்பு கொள்ளவும்.

## - எரிபொருள் விலை அதிகரிப்பின் எதிரொலி -

# மாட்டுவண்டில்கள், கலப்பைகள் குடா நாட்டில் மீண்டும் பயன்பாடு



(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் கிராமப்புறங்களில் கடந்த சில வருடங்களாக கவனிப்பாரின்றி இருந்த மாட்டு வண்டில்கள், கலப்பைகள் ஆகியவற்றை மீண்டும் சீர் செய்யும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கிராமப்புறங்களில் பாவனையில் இருந்த மாட்டு வண்டில்கள், கலப்பைகள் என்பவற்றை அண்மைக்காலமாக விவசாயிகள் பாவிப்பதில்லை. நவீன இயந்திரங்கள் குடா நாட்டில் அறிமுகமானதால் இவற்றின் பாவனை முற்றாகக் கைவிடப்பட்டிருந்தது. இதனால் இவை வீட்டின் பின்புறங்களில் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

கலப்பைகளைப் பயன்படுத்தி முன்னர் நிலங்களை உழுது வந்த விவசாயிகள் தற்போது உழவு இயந்திரங்களையே அதிகம் நாடுகிறார்கள். அதே போன்று வயல்களுக்கும் சந்தைகளுக்கும் பொருட்களைக் கொண்டு செல்லப்பயன்படுத்தப்பட்டு வந்த மாட்டு வண்டிகளும் லான்ட் மாஸ்டர்களின் பாவனையினால் கைவிடப்பட்டன. முழுமையாகவே இயந்திரங்கள் மூலமான விவசாய நடவடிக்கைகளுக்குப் பழகிப் போன விவசாயிகளுக்கு இப்பொழுது வந்து விட்டது சோதனை.

எரிபொருட்களின் அதிகரித்த விலை காரணமாக தமக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும், காலதாமதம் ஏற்பட்டாலும் இவற்றின் மூலம் தமக்கு எந்தவிதமான செலவும் ஏற்படாது எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## நோயாளர்கள் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-முல்லைத்தீவு வைத்திய சாலைகளில் வைத்தியர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வராமையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாமதமாக வரும் வைத்தியர்கள் குறைந்தளவு நோயாளர்களைப் பார்வையிட்டு விட்டு மற்றவர்களை மறுநாள் வருமாறு பணிக்கின்றனர்.

சில வைத்தியர்கள் தங்களுடைய பிரத்தியேக மருத்துவ நிலையங்களுக்கு வந்துசிகிச்சை பெறுமாறு கூறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தாங்கள் தனிப்பட்ட முறையில் நடாத்தி வரும் மருத்துவ நிலையங்களில் அக்கறை யெடுப்பதால்தான் வைத்திய சாலைக்கு வரும்நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

# எரிபொருளின் விலை உயர்வால் கடலுணவுக்கு விலை அதிகரிப்பில்லை

## —வவுனியா மீனவர்கள்—



(வவுனியா)

எரிபொருள் விலையேற்றம் வவுனியா மாவட்டத்தில் கடலுணவுகளில் விலையேற்றத்தை ஏற்படுத்தவில்லை என கடலுணவு விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

கடலுணவுகளின் விலை வவுனியா மாவட்டத்தில் உயர்ந்துள்ளதாக பொது மக்கள் தெரிவித்ததை அடுத்து கடலுணவு விற்பனையாளர்களிடம் இது தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலையேற்றத்தால் கடலுணவுகளுக்கு விலையேற்றம் ஏற்படவில்லை. எனினும் தற்போது மீன் பிடிபடுதல் குறைவாகக் காணப்படுவதன் காரணமாக சில வகை மீன்களுக்கு விலையேற்றம் ஏற்பட்டுள்ளபோதிலும் சில கடலுணவு முன்னைய விலையை விட வவுனியாவில் குறைந்துள்ளதாகவும் விற்பனையாளர்கள் தெரிவித்தனர். (125)

# பேருந்து கட்டணங்களின் அதிகரிப்பால் சில்லறை நாணயங்களை இழக்கும் நிலை

## பயணிகள் கவலை தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அண்மையில் நாட்டில் பேருந்துக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதனால் பொதுமக்களுக்கே மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

நாட்டில் சில்லறை நாணயங்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது. போக்குவரத்துக் கட்டணங்களின் அதிகரிப்பானது சில்லறை நாணயங்களுக்கான தேவையை அதிகரித்துள்ளது.

பொதுவாக ஒரு ரூபாவுக்கும் பத்துருபாவுக்கும் இடைப்பட்ட சில்லறை நாயணங்களின் பயன்பாட்டை இப்பேருந்துக் கட்டணங்களின் அதிகரிப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இதனால் உள்ளூர் சேவைகள் ஆடுபட்டுவரும் பயணிகளில் மற்றும் போக்குவரத்து பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் தமது பயணத்தின் போது தேவையான சில்லறை நாணயங்களை எடுத்துச் செல்லாததின் காரணமாக பேருந்து நடத்துனர்களுடன் முரண் படவேண்டியேற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேபோல் நடத்துநர்களிடத்திலும் தேவையான அளவு சில்லறை நாயணங்கள் இல்லாமல் இருப்பதும் பொறு மக்களிடத்தில் மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தி வருகின்றது. போக்குவரத்தின் போது பொது மக்களை சில்லறைக்காசு எடுத்து வரும்படி நடத்துநர்களால் அடிக்கடி ஞாபகமூட்டப்பட வேண்டிய நிலையும் ஏற்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

# சிவராத்திரி தினத்தில் சைவவாலிப சங்கம் பரிசு

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அளவெட்டி சைவவாலிபச் சங்கம் கும்பழாவளைப் பிள்ளையார் பாலர் கல்விச் சோலை மாணவர்களுக்கு பண்ணிசைப் போட்டிகளை நடாத்தி பரிசுகளை வழங்கியுள்ளது. ஆலயத் தொண்டர் சபை யினரால் நடாத்தப்படும் பாலர் கல்விச் சோலையில் மாணவர்கள் A மற்றும் B,C பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இப் போட்டி நடாத்தப்பட்டது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும் பங்குபற்றிய மாணவர்கள் அனை வருக்கும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டன. முன்பள்ளி மாணவர்களின் இறை வணக்க நிகழ்வைத் தொடர்ந்து ஆசியுரையை ஆலய பிரதமகுரு சோ.குமாரதாசக்குருக்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து தொண்டர் சபையின் தலைவர் ஆசிரியர் செ.சனந்தன் மற்றும் தொண்டர் சபையின் போசகர் ஆசிரியர் மு.செல்லையா ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். பரிசில்களை ஆலய பிரதமகுரு சோ.குமாரதாசக்குருக்கள், தொண்டர் சபையின் தலைவர் ஆசிரியர் செ.சனந்தன் , தொண்டர் சபையின் போசகர் ஆசிரியர் மு.செல்லையா ஆலய தர்மகர்தா சபைத் தலைவர் ஓய்வுபெற்ற உப அதிபர் ம.பத்மநாதன், சங்கீதபூசணம் வி.கே.நடராஜா, சைவவாலிபச் சங்கத் தலைவர் க.நாகலிங்கம் ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.


# திருவையாறுப் பகுதிக்கு மின்சாரம் வழங்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-திருவையாற்றுப் பகுதிக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இப் பகுதிக்கான மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் பிரதேச மக்களும் கூட்டாக இணைந்து பல்வேறு தரப்பினருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச மக்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றினை கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகம் மாவட்ட அரச அதிபர் பொறியியலாளர், வடக்கின் வசந்தம், மின்சார சபை வவுனியா, மின்சார சபை கிளிநொச்சி, ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தின் 5கிலோமீற்றர் தூரத்துக்குட்பட்ட இப்பிரதேசத்துக்கு கடந்த 1989ஆம் ஆண்டு வரையான காலத் திலும் அதன் பின்னர் 2004ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரையான காலத் திலும்



மின்சார வசதியிருந்தது.

ஆனால் மீளக்குடியேறி இரண்டு ஆண்டுகளைத் தாண்டி விட்டது. ஆனால் மின்சார வசதிகள் எவையும் இல்லை. இந்த நிலையில் இப்பகுதிக்கான மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

## மின்சார வசதி இன்றி 1500 குடும்பங்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன் கட்டு, பேராறு, கற்சிலைமடு ஆகிய கிராமங்கள் தொடர்ந்தும் மின்சார வசதி பெறாத நிலையிலேயே காணப்படுகின்றன. இங்கு சுமார் 1500 குடும்பங்கள் வசிக்கின்றன. தொழிற்சாலைகள், பாடசாலைகள் வர்த்தக நிலையங்கள் என்பன அதிகளவில் காணப்படுகின்றன.

மேலும் சுமார் 12இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் கணினி வசதியைக் கொண்டிருந்த போதிலும் மின்சார வசதி இல்லாததால் மின் பிறப்பாக்கியை உபயோகிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கருவேலன் கண்டல் கிராமத்துக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கான வேலைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக் கப்படுகின்றது. இங்கு சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன.





யாழ். படைத்தலை மையகத்தினால் நடாத் தப்பட்ட மூன்று நாள் புகைப்படக் கண் காட்சியின் இறுதி நாள் கண்காட்சி நேற்று யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மங்கல விளக்கேற்றுவதனையும் காட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் சில வற்றையும் காணலாம்.

(படம்: சுமித்தி)

# வடக்கின் கல்வி அபிவிருத்திக்கு யாழ். அபிமானிகள் உதவவேண்டும்

## கோத்தாபய ராஜபக்ஷ கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

இரு பாடசாலைகளுக்கு புதிய கட்டடங்களை அமைப்பதற்கு கென் பாலேந்திரா குடும்பத்தினர் நிதி உதவி வழங்கியுள்ளனர். இந்த நிதி உதவியைப் பயன்படுத்தி வடக்கில் மகாஜனாக கல்லூரிக்கும் தெற்கில் பாதுகாப்பு அமைச்சின் கல்லூரிக்கும் கட்டடங்களை அமைத்துள்ளோம்.

இந்த முன்மாதிரியைப் பின்பற்றி யாழ்ப்பாணத்துடன் தொடர்புடையவர்கள் வடபகுதியின் கல்வி நடவடிக்கையை உயர்த்துவதற்கு முன்வரவேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கடந்த வாரம் புதிய கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இக்கட்டடமானது கென் பாலேந்திரா குடும்பத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. கென் பாலேந்திரா என்னோடு தொடர்புகொண்டு வடக்கிலும் தெற்கிலும் இரண்டு பாடசாலைகளை நிறுவுவதற்கு நிதி உதவி அளித்து வடக்கில் மகாஜனாக் கல்லூரிக்கு நிதி உதவியை வழங்குவதாக கென் பாலேந்திரா தெரிவித்தார்,

இக் கல்லூரிக்குரிய நிதி உதவி தொடர்பாக யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவுடன் தொடர்பு கொண்டு மகாஜனாக் கல்லூரியின் தேவையை அதிபருடன் கலந்தாலோசித்து பாடசாலைக்குரிய தேவையை அறிந்து கொண்டு இக்கட்டடத்தை அமைத்துள்ளோம்.

அதேபோன்று தெற்குக்குரிய நிதியை பாதுகாப்பு அமைச்சின் கல்லூரிக்கு வழங்கியுள்ளோம். இராணுவத்தினரின் பொறியியற் பகுதியின் பங்களிப்புடன் 30 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இக்கட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இராணுவ வீரர்களின் பங்களிப்புடன் இதன் பெறுமதி கூடுதலாக உயர்ந்து நிற்கின்றது, இந்தப் பாடசாலையானது பல கல்வியாளர்களை உருவாக்கியிருக்கிறது. போர்க்காலத்தில் இடம்பெயர்ந்து இயங்கி தற்போது மீண்டும் சொந்த இடத்திற்கு வந்திருக்கின்றது.

இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் இக்கட்டடத்தை அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். இதற்காக அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் மக்களுக்குரிய பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# அறுவடை இயந்திரத்திற்கு காத்திருக்கும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நெல் அறுவடைக்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வரும் நிலையில் இயந்திரமில்லாது தாம் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் மக்கள் மீள் குடியேறி வாழ்வாதாரமாக விவசாயத்தை நம்பி விவசாயச் செய்கையை மேற்கொண்டுவரும் நிலையில் அறுவடைக்கான இயந்திரமின்றி காத்திருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக அனைத்துப் பிரதேசங்களிலும் ஒரே நேரத்தில் அறுவடைகளை மேற்கொள்வதாகவும் இதனாலேயே சில இடங்களில் விவசாயிகள் அறுவடை இயந்திரத்தை கொண்டு அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலையில் தாம் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பெரிய நிதிச்செலவில் இவ்வியந்திரத்தைக்' கொள்வனவு செய்யமுடியாத நிலையில் தாம் இருப்பதாகவும் இம்முறை கடந்த வருடத்தை விட அதிகளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இயந்திரத்தின் உதவியுடனேயே அறுவடையை மேற்கொள்வது இலகுவானது எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (கே)

## ஜெனிவா தீர்மானம்...

நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்படும் இணக்கப்பாடே அடிப்படையாக கருதப்படவேண்டும் என ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

அந்த நடவடிக்கையின் ஆரம்ப கட்டமாக எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் அனுமதி கிடைத்துள்ள பரிந்துரைகளை செயற்படுத்த முடியுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ரணில் விக்ரமசிங்க விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பேச்சுவார்த்தைகளில் தமது தரப்பினர் பங்கேற்காத போதிலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து தமது யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் தெரிவுக்குழுவில் இடம் பெறுமென அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை செயற்படுத்துவதற்கு மேலும் அவகாசம் தேவையென கூறப்படுவதில் அடிப்படை உள்ள போதிலும் கடந்த சில வாரங்களாக மேற்கொண்ட நடவடிக்கைகளால் அரசாங்கம் மீதான நம்பிக்கைக்கு பங்கம் ஏற்பட்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பதில், ஜனாதிபதியிடம் அனுப்பி வைக்கப்பட்டு 15 நாட்கள் கடந்துள்ள போதிலும் அதிலுள்ள விடயங்களை செயற்படுத்துவது ஒருபுறமிருக்க இதற்குப் பதில் கூடக் கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் அது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குட்பட்ட பிரகடனம் என்பதால் அதனூடாக இலங்கைக்கு எவ்வித சட்ட அழுத்தமும் ஏற்படாதென ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார். மறுபுறம் தோற்கடிக்கப்பட்டாலும் பிரச்சினை அத்தோடு முடிவடையாது எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் எதிர்காலத்தில் இத்தகைய வேறொரு பிரேரணை சமர்ப்பிக்கப்படலாம் என்பதை மறக்க கூடாதெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கூட்டமைப்பின்....

குற்றச்செயல்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிலளித்திருக்க வேண்டியிருந்திருக்கும்.

புலிகளின் அரசியல் பிரதிநிதிகளைப் போன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

எனவே புலிகளின் குற்றச் செயல்கள் தொடர்பில் பதிலளிக்க வேண்டியபொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மனித உரிமைகளை மீறிச் செயற்படவில்லை.

புலிகளினால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு அரசாங்கம் நியாயம் வழங்கியுள்ளது. 17000 முன்னாள் புலிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை மீளவும் சமூகத்துடன் இணைத்துள்ளது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாகவும், உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஈழம் தொடர்பில் கனவுகாணுமானால் அது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதனை இப்போதாவது உணர்ந்து கொள்ள வேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களை மீளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிக்கல்களில் ஆழ்த்தக் கூடாது எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஆபிரிக்க...

அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை முறியடிக்கும் வகையில் தமக்கு ஆதரவாக ஆபிரிக்க நாடுகள் செயற்பட வேண்டும் என அவர் கோருவதே இதன் நோக்கமாகும்.

# சி.பீ. கிண்ண முக்கோணத் தொடரில் இறுதிப் போட்டிக்கு அவுஸ்ரேலியா தகுதி



(சிட்னி)

சி.பீ. கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் இந்திய அணியை அவுஸ்ரேலிய அணி 87 ஓட்டங்களால் தோற்கடித்தது. இதன் மூலம் இத்தொடரின் இறுதிப் போட்டிகளுக்கு அவுஸ்திரேலிய அணி தகுதி பெற்றுள்ளது.

சிட்னியில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 252 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் வோர்னர் 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஷேவாக் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 39.3 ஓவர்களில் 165 ஓட்டங்களுடன் சுருண்டது. அவ்வணியின் சார்பில் ஆகக்கூடுதலாக அஸ்வின் 26 ஓட்டங்களைப் பெற்றார். இப் போட்டியின் ஆட்டநாயகனாக வோர்னர் தெரிவானார்.

இத்தொடரில் ஒவ்வொரு அணியும் முதல் சுற்றில் தலா 8 போட்டிகளில் விளையாடுகின்றன. அவுஸ்ரேலிய அணி 7 போட்டிகளின் முடிவில் 19 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் இறுதிப்போட்டிக்கான இடத்தை உறுதி செய்துள்ளது. இலங்கை அணி 6 போட்டிகளில் 15 புள்ளிகளையும் இந்திய அணி 7 போட்டிகளில் 10 புள்ளிகளையும் பெற்றுள்ளன.

இத்தொடரில் அவுஸ்ரேலியாவுடன் இறுதிப்போட்டிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு அதிகம் உள்ளது.

எனினும் நாளை நடைபெறவுள்ள போட்டியில் இலங்கை அணியை அவுஸ்ரேலியா தோற்கடித்து பின்னர் மார்ச் 2 ஆம் திகதி இந்திய அணி போனஸ் புள்ளியுடன் இலங்கை அணியை வெற்றிகொள்ளுமானால் மாத்திரம் இந்தியாவுக்கு இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கான வாய்ப்பு கிடைக்கலாம்.

இல்லாவிடின், இலங்கை - அவுஸ்ரேலிய அணிகள் 3 போட்டிகள் கொண்ட இறுதிப்போட்டித் தொடருக்கு தெரிவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா, சீனா...

கொண்டு வரலாம் என்று எதிர்பார்ப்பு இருந்தபோதும் ஆபிரிக்க அல்லது தென்னமெரிக்க நாடு ஒன்றே அதனைக் கொண்டு வரும் என்று இப்போது தெரிவிக்கப்படுகிறது.

## பன்னாட்டு....

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களில் ஒருவராக மட்டுமன்றி தமிழ் பேசும் மக்களின் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தலைவர் என்ற வகையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாகவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் தான் கலந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடித்....

உபகரணங்களைப் பயன்படுத்துவதற்குத் துறைமுக வசதிகள் அவசியம் தேவையாகவுள்ளது. முல்லைத்தீவு கடற்பரப்பு ஆழம் நிறைந்ததாகக் காணப்படுவதால் பாரிய வள்ளங்கள், மீன்பிடிப் படகுகளை நிறுத்துவதற்குத் துறைமுகம் இல்லாததால் அவற்றை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி துறைமுக வசதியை ஏற்படுத்தித் தருமாறு பலதரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

## சந்தர்ப்பத்தை...

தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது அமர்வில் கலந்து கொள்ளப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் முக்கியமாகத் தெரிவித்திருப்பதாவது:


தமிழ் மக்களுடைய சரித்திரத்தில் மிகவும் முக்கியமானதொரு காலகட்டம் இதுவாகும். சர்வதேசத்தின் பார்வை முழுமையாக இலங்கைத் தீவின் மீது இன்று விழுந்திருக்கின்றது. இந்த நிலையில் 60 வருட காலமாக தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் கேட்கக்கூடிய சந்தர்ப்பம் இன்று கிடைத்திருக்கின்றது. எனவே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா மாநாட்டில் கலந்து கொண்டு தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற கோணத்தில் எமது மக்கள் சர்வதேசத்திடம் எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்பதனை தெரியப்படுத்த வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள்.

தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளை சர்வதேச அரங்கில் பதிவு- செய்ய வேண்டிய கடமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. ஆனால் இந்தக் கடமைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறியிருக்கின்றது.

அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சோகமளிக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை நடைமுறைப்படுத்த வலியுறுத்தும் பிரேரணை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப் போவதாக அறிகின்றோம்.

எனவே இந்த ஜெனிவா மனிதவுரிமைகள் ஆணைக்குழு அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடைய நிலைப்பாட்டை அவர்களுடைய மனோ நிலையை வெளிப்படுத்த முடியாத போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி இருப்பதும், இல்லாமல் போவதும் ஒன்றே. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த முடிவு தமிழ் மக்களிடம் பெரும் ஏமாற்றத்தையே ஏறபடுத்தியிருக்கின்றது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் மோசடிசெய்த தமிழர்கள் பொலிஸாரால் சுற்றிவளைத்து கைது



(ஒன்ராரியோ)

கனடா ரொரன்ரோவில் கார் காப்புறுதி மோசடி செய்த தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கனேடிய ஊடகங்களில் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ள இந்த செய்தியானது அங்கு வாழும் தமிழர்களைத் தலைகுனிய வைத் துள்ளது. இச் செய்தி பற்றி மேலும் தெரியவருவதாவது,

கனடாவின் ஒன்ரேரியோ மாகாணத்தில் தான் அதிகமான கார் காப்புறுதி மோசடி நடைபெற்று வருவதாகவும், வருடத்திற்கு 1.3 பில்லியன் டொலர்கள் மோசடி செய்யப்படுவதாகவும் இதனால் தான் கார் இன்சூரன்ஸ் ஒன்ராரியோவில் அதிகரிக்க வேண்டியுள்ளதாகவும் ஒன்ராரியோ மாகாண கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில் கூறியிருந்தார்.

இதனை அடுத்து பொலிஸார் (Project Whiplash) என்று பெயரிட்டு பல தமிழர்களின் வாகன விபத்துச் சம்பந்தமான கிளினிக்குகளையும் சில சட்ட அலுவலகங்களையும் கடந்த ஒருவருட காலமாக நோட்டமிட்டு புலனாய்வு செய்த பின்னர் கடந்த வியாழக்கிழமை அதிகாலை ஸ்காபுறோ, மார்க்கம், பிரம்டன் நகர்ப் பகுதிகளில் ஒரே நேரத்தில சுற்றிவளைத்து 37 பேர்களைக் கைதுசெய்துள்ளனர். இவர்களில் பெண்களும் அடங்குவர்.

இது எவ்வாறு நடைபெற்றுள்ளது என ஊடகவியலாளருக்கு விளக்கம் அளிக்கையில் நன்கு திட்டமிட்டு ஒரு காருடன் இன்னொருகாரை வீதியில் வைத்து மோதிவிட்டு விபத்து நடைபெற்றதாகப் பொலிஸாருக்கு அறிவிப்பார்கள். பொலிஸாருக்கு அறிவித்தவுடன் வெளியில் தயாராக இருப்பவர்கள் இரு காருக்குள்ளும் ஏறி உட்கார்ந்து விடுவதாகவும், பொலிஸார் வந்தவுடன் விபத்து நடந்தபோது அவ்வளவு பேரும் காருக்குள் இருந்ததாகவும், பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்து விடுகின்றனர். இதன் பின்னர் தங்களுக்குக் கடும் உடற் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அதனை அடுத்து பொலிஸ் ரிப்போட்டுடன் மோசடிக்காரர்களால் நடாத்தப்படும் சட்ட அலுவலகங்களுக்குச் சென்றவுடன் இந்த அலுவலகர்கள் சம்பந்தப்பட்ட இன்சூரன்ஸ் கம்பனியுடன் தொடர்பு கொண்டு நட்டஈடு கோருவார்கள். உடல் நோவுகளுக்காக கிளினிக்குகளுக்கு அந்தச் சட்ட அலுவலகங்களால் அனுப்பப்பட்டு இதற்குரிய மருத்துவ, காப்புறுதி நஷ்டஈடு என்பன காப்புறுதி நிறுவனங்களால் வழங்கப்படுகிறது. இதனால் பெருந்தொகைப் பணம் விரயமாகின்றது என்றும் இதன் பின்னணியில் இயங்கிய பலரை கைது செய்துள்ளோம் எனவும் கிட்டத்தட்ட ஒருவருக்கு 50 ஆயிரம் டொலர்கள்படி காப்புறுதி நஷ்டஈடும் மருத்துவச் செலவும் காப்புறுதி நிறுவனங்களால் செலுத்தப்படுவதாகவும் ரொரன்ரோ மாநகர பொலிஸ் அதிபர் கூறினார்.

அடிக்கடி ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் வாகன விபத்தில் சம்பந்தப்பட்டுள்ளதால் பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் அடிப்படையிலேயே தமது புலனாய்வு முடுக்கிவிடப்பட்டதாகவும் தமிழ் புலனாய்வு பொலிஸாரான கதிரவேலு கஜமுகநாதன் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கையில் தெரிவித்தார். காருடன் கார் மோதுவதால் சாரதிகளுக்கு உயிர் ஆபத்துகூட வரலாம் என்றும் ஆனால் பணத்திற்காக இவர்கள் இந்த ஆபத்து நிறைந்த குற்றச்செயல்களைப் புரிகின்றார்கள் என தெரிவித்தார்.

இந்தக் குற்றச் சம்பவங்களின் பின்னணியில் கைதுசெய்யப்பட்டுள்ள முக்கிய நபர்களின் பெயர்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர். பிரபாகரன் நடேசு (வயது-33), சிவபாஸ்கரன் சபாரத்தினம் (வயது-32), நிசாந்தன் பொன்னுத்துரை (வயது-32), ஜெயகாந்தன் தெய்வேந்திரம் (வயது-43), பாஸ்கரன் தர்மகுலசிங்கம் (வயது-35), மகாலட்சுமி பத்மநாதன் (வயது-57), சுஜீகா கனகலிங்கம் (வயது-32), ரவிகுணதாஸ் குணசிங்கம் (வயது-40), விஷ்ணுகாந்தன் சுபாபதி (வயது-35) எனத் தெரிவித்தனர்

# ஒழுங்கீனமான மாணவர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மாபெரும் கிரிக்கெட் போட்டிகளின்போது, ஒழுங்கீனமாக நடந்துகொள்ளும் பாடசாலை மாணவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸார் எச்சரித்துள்ளனர். ஒழுங்கீனமாக வாகனங்களில் பயணம் செய்வோர், வன்முறைகளில் ஈடுபடுவோர், பெண்கள், பாடசாலை மாணவிகளை துன்புறுத்துவோர், பொது இடங்களில் மதுபானம் அருந்துவோர், சுற்றித்திரிவோர் ஆகியோரை கண்டறிவதற்காக சிவில் உடையிலும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் நிறுத்தப்படவுள்ளனர்.

ஒழுங்கீனமாக நடந்துகொள்பவர்கள் அவர்களின் சமூக அந்தஸ்துகள், பாடசாலைகளில் வகிக்கும் பதவிகள் ஆகியவற்றை கருத்திற்கொள்ளப்படாமல் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என பொலிஸார் அறிவித்துள்ளனர். இவ்விடயங்கள் குறித்து அறிந்திருக்குமாறு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை பொலிஸார் கோரியுள்ளனர். பெரும் போட்டிகள் காலத்தில், மிக ஒழுங்கீனமாக நடந்து கொண்ட சம்பவங்கள் தமது கவனத்திற்கு கொண்டுவ்ரப்பட்டதையடுத்து, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


# மல்லாவி வைத்தியசாலை ஆய்வுகூட வசதி இல்லை

(கிளிநொச்சி)

மல்லாவி மருத்துவ மனையில் ஆய்வுகூட வசதிகள் எக்ஸ்ரே வசதிகள் இல்லாததால் நோயாளிகள் பிற இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அலைந்து திரிகின்றனர். டெங்கு, மலேரியா போன்ற அபாயகரமான நோய்கள் பரவி வருகின்ற நிலையில் இங்கு ஆய்வுகூட வசதிகள் இல்லாமை பெரிய குறைபாடாக உள்ளது. இதனால் நோயாளர்கள கிளிநொச்சி வவுனியா ஆகிய இடங்களுக்குச் செல்லவேண்டிய பரிதாப நிலையிலுள்ளனர். மேலும் எக்ஸ்ரே வசதிகளும் இங்கு இல்லாததால் பெரும் பாதிப்புக்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி முல்லைத்தீவுகளிலுள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வராமையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தாமதமாக வரும் வைத்தியர்கள் குறைந்தளவு நோயாளர்களை பார்வையிட்டு விட்டு மற்றவர்களை மறுநாள் வருமாறு பணிக்கின்றனர்.

சில வைத்தியர்கள் தாங்களுடைய பிரத்தியோக மருத்துவ நிலையங்களுக்கு வந்து சிகிச்சை பெறுமாறு கூறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தாங்கள் தனிப்பட்ட முறையில் நடாத்திவரும் மருத்துவ நிலையங்களில் அக்கறையெடுப்பதால்தான் வைத்தியசாலைக்கு இவர்கள் ஏனோ தானோவென்று வந்து போவதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.



மட்டக்களப்பு முகத்துவாரம் களப்பை அண்டிய பகுதியில் சிறுவர்களுக்கான பூங்கா மரயன் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டு அதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்றது. சிறுவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கபட்ட படகுச் சேவைகள் மற்றும் வெளிநாட்டவர்களையும் கவரக்கூடிய வகையில் தோணி மற்றும் படகுச் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# தூக்கில் தொங்கிய பிக்கு சடலமாக மீட்பு



கண்டி விளக்கமறியலில் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த புத்த பிக்கு ஒருவர் சிறைச்சாலைக்குள் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ள நிலையில் சனிக்கிழமை காலை வேளையிலேயே தெரியவந்துள்ளது. 73 வயதுடைய கங்சரபொல பேமானந்த தேரர் எனப்படும் புத்த பிக்குவே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

500 கிராம் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த 19 ஆம் திகதியன்று கைது செய்யப்பட்ட குறித்த புத்த பிக்கு, மறுநாள் நாவுல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சிறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

# வர்த்தகரிடம் பணம்பெற முயற்சித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

ஹபரண பகுதியில் எரிபொருள் விற்பனை நிலையமொன்றில் பலவந்தமாக பணம் பெற்றுக்கொள்ள முயற்சித்த 02 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அநுராதபுரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் பணத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

விற்பனை நிலையத்தின் உரிமையாளர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டிற்கு அமைய குறித்த உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# 361 பேருக்கு மரண தண்டனை

இலங்கையில் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் வரை 361 பேருக்கு மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது. இவ்வாறு மரண தண்டனை வழங்கப்பட்டவர்களில் 356 ஆண்களும் 5 பெண்களும் உள்ளடங்குவதாக மேலும் அறிவிக்கப்பட்டது. தண்டனை பெற்றவர்களில் கொலை வழக்கு தொடர்பில் 348 பேருக்கும் போதைப்பொருள் தொடர்பான குற்றத்திற்காக 13 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மரணதண்டனை தீர்ப்புகள் ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே இலங்கையில் அமுல்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெடி மருந்துடன் எரிபொருள் தாங்கிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகரில், வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட லொறிகளினதும் ஏனைய வாகனங்களினதும் எரிபொருள் தாங்கிகள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அசோக் லேலண்ட் ரக லொறிகளின் எரிபொருள் தாங்கிகள் 2, இசூஸு ரக லொறிகளின் எரிபொருள் தாங்கிகள் 2, டொயோட்டா ரக லொறிகளின் எரிபொருள் தாங்கிகள் 22, முச்சக்கரவாகனங்கள் 2 ஆகியன காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர்களில் ஒருவரான கபில் அம்மானின் கட்டுப்பாட்டிலிருந்த நீலவன் முகாமிற்கு உட்பட்ட பகுதியில் இவை புதைக்கப்பட்டிருந்தன.

# இலஞ்ச ஊழல் முறைப்பாடுகள் குறைவடைந்துள்ளன

இலஞ்ச ஊழல் தொடர்பாக பதிவாகும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தொடர்பிலும் ஆணைக்குழுவிற்கு தொடர்ந்தும் முறைப்பாடு கிடைத்துவருவதாக அதன் தலைவரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியுமாகிய ஜகத் பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைளை விரிவுபடுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதன் ஒரு கட்டமாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் இணைவதற்கு விரும்பும் பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து அண்மையில் விண்ணப்பம் கோரபட்டிருந்தது. இதன்போது சுமார் இரண்டாயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்கு அமைய தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்பட்டு தற்போது பயிற்சியளிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.